# அறவாழ்வின் அச்சாணிகள்



- பூஜா -

- திருமதி புஸ்பம் மேரியேசேப் அன்ரனி B.Sc.
நெடுந்தீவு.

# சமர்ப்பணம்

ஆளுக்கொரு ஆற்றலை ஆவலுடன் கொடுத்து
அகிலததிற்கனுப்பி வைத்த அமலனே ஆண்டவனே
ஆய கலை பலதையும் நேயமுடன் பயிலவைத்த
அன்பு மிகுதந்தை அதிபரே நெறிமிகு கொறோனேரே

தேனமுதத்துடன் கல்வியையும் குழைத்தேயூட்டி
வானுயர வாழ்வளித்த அன்னையே ஆருயிரே
வாழ்க்கையென்னும் ஓடத்தில் வழிகாட்டி வெள்ளியாய்
ஈன்றெடுத்த செல்வங்களை மேன்மையுற வைத்த பின்பு
ஆறாத்துயரமதை அறுபத்திமூன்றில் கொட்டி
தேவாய்ப் பறந்த உயிர் தலைவனே அன்ரனியே
அறிஞர் வரிசையிலே அ. எனும் எழுத்தாகி
கவிஞர் பாவினிலே பார் ஊர்ந்த அமுதுமாமாலே
புவியில் நாம் காணும் பிணிகளைக் களையெடுக்க
விரவியே இந்நூலைச் சமர்ப்பித்தேன் : ஏற்றருள்வீர்.

– திருமதி புஸ்பம் மேரியேசேப் அன்ரனி –

# "சாத்தானே

# ஓரம்போ....."



## காட்சி – 1

(ஏதேன் தோட்டம் - பாம்பு, ஏவாள், ஆதாம்)

பாம்பு : ஆகா, ஏவா எப்படி சௌக்கியமா?

ஏவா : யார் நீ, யாரை வேணும்?

பாம்பு : உன்னைப் பார்க்கத்தான் வந்தேன் எப்படியிருக்கின்றாய் என்று பார்த்துவர சிவன் அனுப்பினார்.

ஏவா : யாரது? சிவனா? அது யார்?

பாம்பு : என்ன அப்படிக் கேட்கிறாய், முழு முதல் கடவுள் கையிலையில் உறைபவர் அவர் கழுத்தில் உறைபவன் நான். ஓ நீ புது ஆள் தானே. தெரியாது தானே நான் ஒரு நலன் விரும்பி, எல்லோரும் இன்பமாய் வாழ வேண்டும் என விரும்புவன் தேவர்களின் நண்பன் நவக்கிரகங் களின் அவதாரம் உன்னைக்காப்பது என் லட்சியம் கடமை அதுதான் வந்தேன்.

ஏவா : என்னைக் காப்பதா எமக்கென்ன குறை நாம் பேரின்பமாகத்தானே இருக்கிறோம்.

பாம்பு : ஹ, ஹ,ஹா ஹுசு ஹுசு இது பேரின்பமா? பேரின்பம் என்றால் என்ன என்பது தெரியவில்லை உனக்கு. இந்தா பார் எம்மைப் போன்ற வல்லமைகள் எதாவது இருக்கா உங்களுக்கு? உன்னால் எம்மைப் போன்று நினைத்த உருவம் எடுக்க முடியுமா? உன்னால் விண்வெளி யில் மிதந்து எம்மைப்போல் நினைத்த இடத்தை அடைய முடியுமா? புத்தி, அறிவு, சத்தி என்று ஏதாவது இருக்கா இதையெல்லாம் அந்தக்

கடவுள் உங்களுக்கேன் தரவில்லை? பொறாமை, நீங்கள் தன்னைப் போல் மாறிவிடுவீர்கள் என்று பொறாமை. அதோ பார் அந்த மத்தியில் உள்ள மரத்தின் கனியை, அதை எப்போதாவது உண்டிருக்கிறாயா?

ஏவா : இல்லை, அதை உண்ணக் கூடாது என்று கடவுள் கூறியிருக்கின்றார்.

பாம்பு : பாத்தியா நினைச்சேன் அதில் தான் விஷயமே இருக்கு. அதை நீ உண்டால் கடவுளைப் போல் எம்மைப் போல் சக்திமான் ஆகிவிடுவாய் பின் கடவுளைப் போலாகி விடுவீர்கள் என்ற பயம் கடவுளுக்கு! அதன் சுவை தெரியுமா? அப்பா என்ன ருசி, ஒன்றைத் தின்றுபார், போ, கடவுளைப் போலாவாய்.

ஏவா : மாட்டேன் கடவுள் கோபிப்பார், அவர் கட்டளையை மீறலாமா?

பாம்பு : இது என்ன புதுக்கதை, உங்களைத் தானே தன் பிள்ளைகள் என அன்புடன் அங்கீகரித்துள்ளார். தந்தை தன் பிள்ளைகளைத் தணடிக்க மாட்டான். ஒன்றும் யோசிக்காதே, அவர் கோபிக்க மாட்டார் கோபிச்சாத் தான் என்ன? எங்கள் கடவுள் இருக்கின்றார் கேட்பதெல்லாம் தருவார் சீக்கிரம் போ, நான் போக வேண்டும் போ?

(ஏவாள் கனியைப் பறித்து உண்கிறாள் அறிவுக் கண் திறக்க வெட்கமடைந்து, மரத்தின் பின் ஒழிகிறாள், ஆதாம் வருகிறான்)

ஆதாம்: ஏவா... ஏவா... எங்கிருக்கிறாய்

ஏவாள்: (பழத்தை ஆதாமுக்கும் கொடுத்து) இதோ இதைத் தின்றுபார்
(ஆதாம் உண்கிறான்)

ஆதாம்: என்ன நாம் ஆடையின்றி இருக்கின்றோம். வா, இலைகளால் மூடிக் கொள்வோம். (இலைகளால் மூடல்)
(கடவுள் குரல்)

கடவுள் : ஏவாளே விலக்ககப்பட்ட கனியை ஏன் உண்டாய்?

ஏவாள் : ஆண்டவரே பாம்புதான் சாப்பிடச் சொல்லி ஏமாற்றியது?

கடவுள் : நீங்கள் சாத்தானின் சொல்லைக் கேட்டு என் கட்டளையை மீறி மரணத்திற்குரிய கனியை உண்டு பாவம் செய்தபடியால் நீங்கள் இனிமேல் என்னுடன் இங்கிருக்க முடியாது. போய்ச் சபிக்கப்பட்ட பூமியில் கஸ்டப்பட்டு வியர்வை சிந்தி உணவைத் தேடுங்கள். பெண்ணே நீ தாயாகிப் பிள்ளை பெறும் காலத்தில் பெரிய வேதனையை அனுபவிப்பாய். மரணத்திற்குரிய கனியை உண்டபடி யால் மரணித்து மண்ணோடு மண் ஆவீர்கள். பாம்பே அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும், நீ அதன் குதிக் காலை காயப்படுத்து

வாய் (என்று சபித்து) அப்பாலே அகன்று போங்கள்.
(என்று கலைத்து விட்டார்)

## காட்சி - 2

(சாத்தான்கள் கூட்டம். சந்திரன். ராஜன். கரன். மிலன். ரவி. யூட்)

சாத் (2) : அப்பாடா. இவ்வளவு காலமும் பாடுபட்டு எப்படியோ பூமியைக் கலியுகத்திற்கு கொண்டர்ந்திட்டோம். இந்தப் பொடிப் பயல்கள் என்ன பேசப் போறாங்க என்று பார்ப்போம்.

சாத் (3) : ஹி ...ஹி... ஹி... என்னத்தைப் பேசுவாங்க எண்டு தெரியாதா. காதல் கல்யாணம் பெட்டையள் சினிமா ஸ்ரார். கடத்தல். கொள்ளை. கொலை இதுகளைத் தவிரக் கூட்டாய்ச் சேர்ந்தால் என்னத்தைப் பேசுவாங்க.

சாத் (2) : பேசறதா பார் பூமியை இந்திரலோகம் போலாக்கி விட்டோம். ஒரே ஆட்டமும் பாட்டமும் கூத்தும் கும்மாளமும்! கற்பென்றால் என்ன கட்டுப்பாடு என்றால் என்ன என்பதே புரியாத வாழ்கையும் அப்பப்பா தேவர்கள் எந்த மூலை இந்திரன் சந்திரன் எல்லாம் பிச்சை வாங்க வேண்டும். தேவர்கள் அரக்கர்களில் ஏமாற்றம் அடைந்த இறைவன் மனிதர்களைப் படைத்தான் அவனை நாம் ஏமாற்றி எம்முடன் சேர்த்துக் கொண்டோம் பார், கடவுளின் நிலையை! முட்டாள்!

(நண்பர்கள் உட்கார்தல்)

ராஜன் : அப்பா பிதாவே கலியுகத்தில் வந்து பிறந்து எவ்வளவு கஸ்ரப்படுகிறோம்.எல்லாம் அந்த ஆதாம் ஏவாளால் வந்த வினை.

ரவி : அவர்கள் யார் உனக்கென்ன முறை எங்கிருக்கிறார்கள்?

கரன் : அவர்கள் தான் நம் ஆதித் தாய் தந்தை கடவுள் சொல் கேளாது விலக்கப்பட்ட கனியை உண்டதால் கடவுள் சந்நிதானத்தைவிட்டு தண்டனையுடன் கலைக்கப்பட்ட முதல் மனிதக் குடும்பம்.

ரவி : கலைக்கப்பட்டார்களா? கலைக்கப்பட்ட பின் என்ன நடந்தது?

ராஜன் : பூமியில் அவர்களினால் மனித குலம் பெருகியது. சாத்தான் விடா முயற்சியால் பாவமும் பெருகியது. கடவுள் கடும் கோபம் கொண்டு நீதிமானாயிருந்த நோவாவையும் குடும்பத்தாரையும் ஜீவராசிகளில் இவ்விரண்டையும் பொருட்களையும் ஒரு பேழைக்குள் குடிபுகச் செய்துவிட்டு 40 நாள் மழை வெள்ளத்தால் பூமியை அழித்தார்.

சாத்தான்: அவர் அழிச்சாரா? நாங்கள் தானே அழிப்பிச்சோம் எப்படிச் சந்தோஷப்பட்டோம் பார்த்து பார்த்து ஆகா!

ரவி : ஐயோ எல்லாம் அழிந்ததா?

கரன் : ஆமாம், நோவாவின் பேழையைத் தவிர யாவுமே அழிக்கப்பட்டது.

ரவி : ஐயோ அதன் பின்?

கரன் : திரும்பவும் மனித இனம் நோவாவிலிருந்து பெருகியது. சாத்தானின் வல்லமையால் திரும்பவும் பாவம் பெருகியது.

சாத்தான்: மனிதன் இந்த ஐயாவின் சொல்லைத் தான் கேட்கிறான். கடவுளைக் கொஞ்சம் கூட மதிப்பதில்லை.

கரன் : கடவுள் பாம்புக்குச் சாபம் கொடுத்த போது பெண்களின் வித்து என்று குறிப்பிட்டது ஒரு மீட்பரை எனவே வாக்கு மாறாத கடவுள் மீட்பர் ஒருவரைத் தயார் செய்ய மனிதருள் நீதிமானாயிருந்த ஆபிராமைத் தெரிந்தார்.

ரவி : எப்படி? தேர்தல் வைத்தாரா?

கரன் : என்ன முட்டாள் கேள்வி. அவருக்கேன் தேர்தல், ஒவ்வொருவனை யும் அவன் இதய சிந்தனைகளையும் தெரிந்த கடவுளுக்கு ஒருவனைத் தெரிய தேர்தலா? முட்டாள், முட்டாள்.

சாத்தான்: என்னடா விடுத்து விடுத்துக் கேள்வி உனக்கு,

மிலான் : கேள் அந்தப் பழங்ககதையொல்லாம் நான் சொல்கிறேன்.

சாத்தான்: சொல்லிறியா? மவனே தொண்டையை நசுக்கிப் போடுவன் நீ சொல்லு பார்ப்போம்.

மிலான் : (கடுமையாக செருமியபின்) இறைவன் 75 வயதாகியிருந்த ஆபிராமை அழைத்து மலடியாயிருந்த மனைவி சாராயுடன் நான் காண்பிக்கும் நாட்டுக்குச் செல் உன்னைப் பெரிய இனமாக்குவேன் என்றதும் மறுசொல் பேசாது கானானை அடைந்தார்.

சாத். 2 : ஆபிராமுக்கு 99 ஆகியும் நான் பிள்ளைப் பெறவோ இனத்தைப் பெருக்கவோ விடவேயில்லை பிள்ளையற்ற மலடுகளாக வைத்தி ருக்க எப்பாடுபட்டேன் என்பது எனக்கும் அந்த முட்டாள் கடவுளுக்கும் தான் தெரியும்.

மிலான் : (இருமிக் கொண்டே) ஆபிராமுக்கு 99 ஆகியபோது மீண்டும் அவருக்குத் தோன்றிய இறைவன் அவருக்கு சந்தேகம் போக்கி எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தை ஆவாய் இனி உன் பெயர் ஆபிராம் அன்று ஆபிரகாம் என்றார்.

சாத்.3 : அது மெய்தான் பெயர் மாத்தினதும் நம்ம நவக்கிரக மூதேவியர் களால் ஒன்றும் பண்ண முடியாமல் கடவுள் வென்றிட்டார் கிழவன் பிள்ளையொன்றையும் பெற்றெடுத்தான்.

மிலான் : (இருமி) சாராயி ஈசாக்கை பெற்றார் ஈசாக்கின் மகன்யாக் கோபுவுக்கும் 12 புதல்வர்கள். அந்த 12 பேரிலிருந்தும் தான் இஸ்ராயேலின் 12 கோத்திரங்களும் உருவாயின, இயேசுவும் உதித்தார்.

ரவி : அடேயப்பா இஸ்ராயேல் நல்ல பெயர்.

கரன் : இறைவன் யாக்கோபுவுக்கு வைத்த பெயர் அது.

சாத்.4 : அந்தப் பெயர் மாறும் வரை நான் யாக்கோவைப் படுத்தினபாடு கொஞ்சமா? சொல்லேண்டா, அதை எல்லாம் சொல்லமாட்டான்!

சந்தி : அப்போ ஏசாயா, எரேமியா, எசேக்கியல் இவர்களெல்லாம் யாக்கோபுவின் புதல்வர்களா?

மிலான் : இல்லையில்லை அவர்கள் எதிர்காலம் பற்றிக் கூறும் இறைவாக் கினர். மீட்பர் இயேசு பற்றிய உண்மைகளை அறிவிப்பதற்காக ஆண்டவரால் அனுப்பப்பட்டவர்கள்.

சந்தி : தாவீது என்பவர் யார்?

ராஜன் : யாக்கோபின் நான்காவது புதல்வன் யூதாவின் கோத்திரத்துதித்த வன். சவுல் இஸ்ராயேல் அரசனாயிருந்த போது தாவீது, கோலியாத் என்னும் கொடிய பிலிஸ்திய இராட்சதனைக் கொன்று இஸ்ரயேலரைக் காப்பாற்றியதால் சவுலின் பின்னர் இஸ்ராயேல் அரசனானவர்.

சாத். 2 : அப்போது மட்டும் தாவீதை நாம் கொன்றிருக்க வேண்டும். கோலி யாத்து இஸ்ராயேலரை கொன்று திண்டே அழிச்சிருப்பான். இன்று பைபிளில் சங்கீதமும் இராது. பிழை விட்டிட்டோம்.

யூட் : தாவீது அரசன் தான் பைபிளில் உள்ள சங்கீதங்களை வீணையுடன் பாடி இறை புகழ் பரப்பியவர். அவர் மகன் சாலமோன் யெருசேலம் தேவாலயத்தைக் கட்டுவித்தவர். ஞானம் மிக்கவர். இறைவன் மீட்பர் இயேசுவைத் தாவி துரான் சந்தத்தியிலிருந்து தோற்றுவித்தார். யோசேப்பின் மனைவி மரியாள் கன்னித் தன்மைஇழக்காதிருக்க காபிரியேல் தேவ தூதன் தோன்றி பரிசுத்த ஆவியால்கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவாள் அவருக்கு இயேசு என்று பெயரிட வேண்டும் என அறிவித்தார்.

சாத்.2 : காபிரியேல் சனியன் சொல்லிப் போட்டு பறந்திட்டுது அன்று தொட்டு

அந்த இயேசுவை சிலுவையில் அறையும் வரை நாம் பட்ட பாடு!

சாத்.3 : பாடா? படாத பாடுபட்டு அந்த பரிசேயர் வேதபாரகரைத் தூண்டி அவர்கள் மூலம் மக்களைத் தூண்டி மக்கள் அரசனைத் தூண்டி அந்த இயேசுவைக் கடைசியாகச் சிலுவையில் அறையும் வரை நாம் பட்ட பாடு! எப்படியும் நினைச்சதெல்லாம் செய்திட்டோம்.

சாத். 3 : செய்தென்ன பயன்! மூன்றாம் நாள் பாவிப் பயல் உயிர்த் தெளுந்து விட்டான்.

ரவி : கடவுள் பெயர் வைப்பதும் வைத்த பெயர்களை மாற்றி வைப்பதும் ஏன்? ஏதாவது எண் சாஸ்திரம் முறைக்கமையவா, அப்படிக் கடவுள் ஏதோ விதித்துள்ளார் போலிருக்கிறது.

ராஜன் : தெரியல்ல ஆனா இயேசு என்றால் பேய் நடுங்கும்.

சந்திரன் : ஏன் இயேசுவின் பிறப்பையும் தோன்றிய புது நட்சேத்திரத்தைக் கொண்டு தானே கீழைத் தேசத்து சாஸ்திரிமார் கண்டு பிடித்தனர். அப்படியானால் ஒவ்வொருவர் வாழ்வும் நட்சேத்திரத்தால் குறிக்கப் படுகிறதென்பதை நம்பலாமா? அதைத் தானே இந்துக்கள் விதி என்கிறார்கள்.

ராஜன் : அதெல்லாம் ஜென்ம பாவதோஷத்தால் விதிக்கப்படும் விதி வாழ்வாயிருக்கலாம். ஆனால் அதால் வர இருக்கும் தீமைகள் கிறிஸ்துவின் திருமுழுக்கால் களையப்பட்டு கிறிஸ்தவர்கள் புதுப் பிறப்படைகின்றோம். எனவே முற்பிறப்பு பற்றிய கவலை எமக்கு தேவையற்றது. எம் வாழ் நாளில் நாம் செய்யும் செயல்களைக் கொண்டு மட்டும் மரணத்தின் பின் தீர்ப்பு பெற்று மோட்சம் அல்லது நரகத்தை அடைகிறோம். இப் புதுவாழ்வில் பாவம் ஒன்று செய்துவிட்டால் முழுமையாக வருந்தி மன்னிப்புக்குள்ளாகும் பட்சத்தில் நாம் மோட்சத்தை அடையலாம். காரணம் நம் பாவத்திற்காக இயேசு பலியாகியதால் பாவம் நீங்கி மீட்கப்படுகின்றோம். இவ்வாறு மீட்கப்படாதோர் பரலோகராச்சியத்துள் பிரவேசிக்க முடியாது என வேதாகமம் கூறுகிறது.

சாத்தான் : வேதாகமம் மட்டுமா நானும் தான் விடுவேனா? பாவி என்றதும் பறந்துபோய் இழுத்துக்கொண்டு போய்விடுவோமே அதில் என்ன சந்தேகம்?

ரவி : அப்படியானால் கிறீஸ்தவரல்லாத எமக்கு மோட்சமில்லையா?

மிலன் : உங்கள் நம்பிக்கையின் படி மறுபிறப்புண்டல்லவா? பாவம் செய்தால் கூன், குருடு, முடமாய் தவிரவும் புல்லாய் பூண்டாய் புழு

வாய் மரமாய் மிருகமாய் பறவையாய் பாம்பாய் கல்லாய் மனிதனாய் பேயாய் கணங்களாய் அசுரராய் முனிவராய் தேவராய்ப் பிறப்பெய்து வர் என விசுவாசிக்கிறீர்கள் தானே. புலால் உண்போர், நரகாக்கி னைக்கு ஆளாவார் என்கிறதே உங்கள் மதம். அப்படியானால் எத்தனை பேர் அந்த ஆக்கினைக்காளாகாது தப்புவீர்கள்?

சாத்.4 : கைவிரல் காணும் எண்ண.

ரவி : அப்படியானால் கிறிஸ்தவர்கள் உயிர்க்கொலை செய்யலாமா?

மிலான் : சாத்தானின் படைப்புக்களைக் கொல்லலாம்.

ரவி : நரகம் எப்படியிருக்கும்.

மிலான் : நமது வேதத்தின்படி அவியா அக்கினி நித்திய நெருப்பு. தவிரவும் வீனஸ் தெய்வம் அழகு தேவதை என்றெல்லாம் போற்றப்படும் வெள்ளிக் கிரகம் தான் அந்த நரகலோகமாய் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். ஏனெனில் அதன் வெப்பநிலை $450^{0}C$ நீர் கொதிப்பது $100^{0}C$ ல் தவிரவும் அதில் நீண்ட செவிகளுட னான குள்ளமான உருவங்களின் நடமாட்டமும் பிளந்த இருண்ட குகைகளும் உண்டெனக் காணப்பட்டுள்ளது.

சாத்.3 : நாங்கள் அதில் இருக்கிறோம் தானே இருந்து நாம் ஓலமிடுவது தெரியுமாடா உங்களுக்கு.

சந்திரன் : பைபிள்களில் கூறப்படும் இறுதிக் காலம் நெருங்குகிறது என்று கூறுகிறார்களே உண்மையா?

யூட் : ஆமாம். இன்று றோ போக்கள் ஆதிக்கம் பெரிதாகிவிட்டது. வரப் போகும் மிகச் சக்தி வாய்ந்த றோபோ மனிதனை அழிக்கப் போகிறது திருவெளிப்பாடு 13ம் அதிகாரம் 13ம் வசனம் கூறுகிறது. "அச்சிலை யைப் பேசவைக்வும் அதனை வணங்காதவர்களை கொலை செய்யவும் அதற்கு உயிர் கொடுக்குமாறு இரண்டாம் விலங்குக்கு அனுமதி வழங்கப்பட்டது என்று அது அவரவர் வலக்கையில் அல்லது நெற்றியில் 666 என்ற குறியை இட்டுக்கொள்ளுமாறு செய்யும்.

சாத் 3 : என்னைப் பற்றியே பயப்படறாங்க பேசுறாங்கள் எல்லாம் அறிந்திருக்கிறாங்களே தப்பிக்கப் போறாங்களே! இவாங்களுக்கெல் லாம் எப்படித் தெரிகிறது! ஐயோ அந்த பைபிள்!

மிலான் : அக் குறியை இட்டுக் கொள்ளாதவர்களால் விற்கவோ வாங்கவோ முடியாது என பைபிளில் உள்ளதே.

சாத்.3 : ஏன் இப்பவே வாங்கிப் பதுக்கப் போறியா?

ரவி : அச் சிலை தான் வரப்போகிற றோபோவா?

மிலான் : அப்படித்தான் இருக்கலாம். அதை எவராலும் அழிக்க முடியாது. தான் தான் கடவுள் என்று கூறி தன்னை வணங்காதோரை வதம் செய்து அழிக்கும்.

சந்திரன் : கடவுள் ஏன் தான் இதையெல்லாம் அனுமதிக்கிறாரோ?

சாத் : முட்டாளே அவரா அனுமதிக்கோணும் என்னுடைய படைப்படா அது நான் தான் அதன் கடவுளடா.

யூட் : இறைவனுக்கு நிம்மதியில்லை திரும்பும் இடமெல்லாம் பாவமும் எதிர்ப்பும் கிரகங்கள், தேவாகள், அரக்கர்கள், நரகர்கள் எல்லாமே வீணான படைப்புக்கள் ஆகிவிட்டன என மனிதனைப் படைத்தார் அவனோ சாத்தானையும் மிஞ்சிவிட்டான் பாவம் கடவுள் வாக்கு மாறாதவர்! கொடுத்த சக்தியை திரும்பப் பறிக்கமாட்டாதவர். ஈற்றில் பாவம் மனிதன் என்று அவனைப் பிசாசிடமிருந்து மீட்க

மனிதனான

பலன் என்ன சிலுவையில் அறைந்து கொன்றனர்.

ரவி : இயேசுவை ஏன் கொலை செய்தனர்?

கரன் : தச்சன் மகன் தன்னைக் கடவுள் என்கிறான் என்று

ரவி : அறியாமல்தானே செய்தனர்?

கரன் : ஆமாம் ஆனால் இயேசு தனது வார்த்தைகளால் செயல்களால் புதுமைகளால் தான் யாரென்று சான்று பகிர்ந்தாரே அதிலிருந்து நம்பியிருக்கலாம்.

சந்திரன் : சாத்தானாலும் புதுமைகள் செய்ய முடியும் தானே.

சாத் : அதிலும் சந்தேகமாடா முட்டாள் என்னால் முடியாதது உள்ளதாடா? பரதேசி?

கரன் : முடியும் ஆனால் அது பாவங்களை வெறுத்து மன்னிக்காது சாத்தான் பாவத்தின் பிறப்பிடம் கடவுளின் எதிரி என்பதைப் போதித் தார். பசாசை துரத்தினார் இயேசு என்றதும் பசாசு பயந்து அலறியது. திமிர்வாதக்காரனொருவனைப் படுக்கையுடன் கொண்டு வந்தபொழுது உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார் அங்கிருந்த அவரது விரோதிகள் பாவத்தை மன்னிக்க இவன் யார் கடவுளா என்று கொதித்தனர். இயேசுவோ அமைதியாகக் கடவுளுக் கல்லால் பாவத்தை மன்னிக்க வேறெவர்க்கும் அதிகாரம் கிடையாது

எனவே நான் சொல்கிறேன் உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நீ எழுந்து உன் படுக்கையைத் தூக்கிப் போ என்றார் உடனே அவன் எழுந்து அவரை ஆராதித்துப் போனான் ஓய்வு நாளுக்குக் கர்த்தர் நானே என்று கூறி தன்னை வெளிப்படுத்தினார். இறந்தோரை உயிர்ப்பித்தார். தானே சாவினின்று மூன்றாம் நாள் உயிர்த்து எழுந்தார்.

சாத். 3 : அதைக் கூட உலகம் உணர முயாது பண்ணினது நான் தாண்டா.

ரவி : இப்படியெல்லாம் நடந்துமா அவரை ஏற்றுக் கொள்ளவில்லை?

ராஜன் : ஏன் நீ ஏற்றுக் கொண்டாயா?

ரவி : எனக்கொன்றும் இதுவரை தெரியாதே இனிப்பாரேன் என்ன செய்கிறேன் என்று

மிலான் : சீக்கிரம் செய் அதை! அழிவிலிருந்து தப்புவதற்கு திருவெளிப் பாட்டடில் 6ஆம் அதிகாரம் 8ம் வசனத்தைப் பார்.

"வாள் பஞ்சம் கொள்ளை நோய் ஆகியவற்றாலும் விலங்கு களாலும், உலகின் கால் பகுதியை அழிக்க சாவுக்கும் பாதாளத்துக் கும் அதிகாரம் அளிக்கபட்டது" என்றுள்ளது"

சாத் 2 : ஆமாம் எமக்களிக்கப்பட்டது. உனக்கென்னடா?

கரன் : இறுதி அழிவிற்கு முன் கடவுளுடைய பணியாளர்களின் நெற்றியில் முத்திரையிடப்படும் இஸ்ராயேவரில் முத்திரையிடப்படுவோர் ஓர் இலட்சத்து 44 ஆயிரம் மட்டும் தான் மிகுதியாராலும் எண்ண முடியா எல்லா நாட்டையும் குலத்தையும் சேர்ந்த பெரும் திரளா னோர் என்றும் உள்ளது.

சந் : மிகுதி எனப்படுவோர் நாமா கரன்?

கரன் : ஆமாம் இயேசுவின் இரத்தத்தால் தம்மை வெண்மையாக்கியோர் மட்டும் பாதுகாக்கப்படுவர். மிகுதி நெருப்பிலே தள்ளப்படுவர் என்று ள்ளது. திருவெளி 8ம் அதிகாரம் 6ம் வசனத்திலுள்ளது. அக்காலத் தில் மனிதர் சாவைத் தேடுவர் ஆனால் சாவு அவர்களை அணுகாது என.

சாத.2 : ஆமாண்டா நாம் வருந்துவது போல உங்களையும் நாம் சாக விடாது வருத்தி மகிழ்வோம் ஆமாம் விடுவோமா விடமாட்டோம்டா வருத்துவோம் கடவுள் பார்த்து பார்த்து துடித்து அழுது வடியணும்

சந்திரன் : அரக்கப் பாம்பு பற்றி உனக்குத் தெரியுமா?

யூட் : திருவெளிப்பாட்டின் 12ம் அதிகாரத்தின்படி 7 மணி முடிகளுடன் 7

தலைகளும் 10 கொம்புகளும் கொண்ட நெருப்பு மயமான பெரிய அரக்கப் பாம்பு தன் வாலால் 1/3 பங்கு விண் மீன்களை இழுத்துப் போட்டபின் மிக்கேலும் அவர் தூதர்களும் அதனுடன் போர் புரிந்து அதையும் அதன் தூதர்களையும் விண்ணகத்தை விட்டு வெளியே தள்ளினார் சாத்தான் என அழைக்கப்படும் அதுவே தொடக்கத்தில் தோன்றிய பாம்பு. மண்ணுலகுக்குத் தள்ளப்பட்டதால் சினம் கொண்டு உலகு முழுவதையும் ஏமாற்றி வருகிறது மக்கள் அதை வணங்குகிறார்கள் அதை வணங்குபவர் கொலை செய்யப்பட்ட கிறிஸ்துவின் வாழ்வின் நூலில் பெயர் எழுதப்படாதோர்!

சாத். : என்னடா நெடுகிலும் என்னையே பற்றிய எல்லாத்தையும் சொல்லிறியா? இரு இரு அசமந்தம்.

சந்திரன் : மக்கள் ஏன் இன்னமும் மனம் மாறவில்லை பிழையான பாதை யையே ஏன் பிடிவாதமாகப் பிடித்துள்ளனர்?

மிலான் : உலக மாயையில் மயங்கியுள்ளனர். அவர்கட்குத் தேவையான உலக நலன்களைச் சாத்தான் வழங்கி வருவதனால் ஆணவமுற்று அதையே வணங்கி உண்மையைத் தேட முயற்சிப்பதில்லை.

சாத் 2 : நான் வழங்குவேன், பின் விழுங்குவேன் அது தான் நான். பூமி என் பிடியில் தானே தெரியாதா? பூமியைத் தருவேன் என்னை வணங்கு என யேசுவைக் கேட்டேனே உன் போன்றோரை மடக்குவது தான் தொல்லையாயிருக்கடா? என்றாலும் உன்னை விடவே மாட்டேன் பாருடா எப்படி என் காலைப் பிடிக்க வைக்கிறேன் னென்று முண்டம்.

மிலன் : ஈற்றில் பாவங்கள் மன்னிக்கப்படாத நிலையில் மரணித்து நித்திய ஆக்கினைக்கு ஆளாகுவர். ஏனெனில் கடவுள் சொல்கிறார் "நானே உன் கடவுளாகிய ஆண்டவர் என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருந்தால் ஆகாது" என்று.

ரவி : அப்படியானால் கத்தோலிக்கர் சவேரியார் அந்தோணியார் என பரிசுத்தவான்களை வணங்குகிறார்களே?

யூட் : யார் சொன்னது? அவர்களைத் தங்கட்காக கடவுளிடம் வேண்டிக் கொள்ளும் படிதான் பிடிப்பார்கள் கிறிஸ்து மாதாவை மனிதரின் உலக நன்மைக்காக தன்னிடம் பரிந்துரைப்பவர் என பைபிள்களில் கானாவூர்க் கலியாணத்தில் வெளிப்படுத்தி காட்டியுள்ளார்.

ராஜன் : ஐயோ 12 மணியாச்சு வாங்க போகலாம்?

சாத் 4 : போகப் போறிங்களா? இவங்களோட போவோமா அடடா முடியாதே குருசல்லா போட்டிருக்கிறாங்கள்
(நண்பர்கள் போதல்)
இவங்களில் ஏற முடியாதே!

சாத்.2 : சே என்ன இழவு இப்படியும் இருக்கிறான்கள் இந்த கலியுகத்தில் இவங்கள வதைக்கோணும்.

சாத். 3 : பார்த்தியளா என்னத்தை எப்படிப் பேசினாங்க என்று ரவி என்டவன் கோபப்பட்டு சண்டை போடுவனாக்கும் எண்டு இருக்கப் பார்த்தியளா பைத்தியத்தை இவங்கள் விடப்படாது விடவேபடாது நோய் பிணி, துன்பம் என்று வருந்த வேண்டும் கடவுளைத் தூற்றும் வரை சோதிக்க வேண்டும். (பீல்சி வரல்)

சாத்.2 : கலோ பீல்சி இந்தியாவில் வேலை எப்படி?

பீல்சி : சுப்பா! பிச்சுப்போட்டன் தெரியாதா உனக்கு பாகிஸ்தானியன் ஒருவன் மூலம் றெயில்வேஸ் டேஸன் ஒன்றில் குண்டு வச்சோம் அப்பப்பா எத்தனைபேர் செத்தாங்கள்! பாவத்தோட செத்தவங்கள் எல்லாரையும் அங்கேயே பசாசா எங்களைப் போல அங்கையே அலையவிட்டு வந்திட்டோம்.

சாத்.3 : நாளை ஜனாதிபதி கூட்ட இருக்கும் ஆலோசனைக் கூட்டத்திற்குப் போய் அந்த தளபதிகள், அமைச்சர் ஆலோசகர் தம்பிமார் பாராளுமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சியினர் எல்லோருக்குள்ளும் புகுந்து விளையாட வேண்டும்.

சாத்.4 : ஆமாம் ஏற்கனவே சமாதானத்திற்குப் போர் தமிழனுக்காகப் போர் என்றெல்லாம் ஜனாதிபதியைச் சிந்திக்கவைத்துப் போரில் செத்தவங் களில் எத்தனையோ பேரைப் பேயாக்கி எங்களோட சேர்த்திட்டோம் எல்லாம் வவுனியா வன்னியென உலாவித் திரியுறாங்கள். இனி என்ன? இனி என்ன நம்மபாடு வெற்றி தான். அந்தக் கடவுளை பெரிய இராச்சியம் நம்மடதாகிப் பரவிய பின் பார்க்கோணுமே கடவுளிட மூஞ்சியை

சாத் 5 : இந்தா பாருங்க ஜனாதிபதி இப்ப ரொம்ப தெளிவா இருக்கிறார். இரவு பகலா சிந்திச்சு சிந்திச்சு தான் யுத்தம் செய்யும் சிந்தனையில்லா திருக்க யுத்தமொன்று வந்ததே எனப் புழுங்கி இப்போது உறுதியான தீர்மானங்களோட இருக்கிறார். அசோகன் போல் ஆட்சி செலுத்த எண்ணியிருக்க இப்படி யுத்தம் நடந்ததே என வருந்தி இனிமேல்

தடுமாறாது தான் யார் என்பதை மற்றையோருக்கு காட்ட வேண்டும் என்றல்லா இருக்கிறார்.

சாத்.2 : சும்மா கிட நாம் பலமாகப் போராடினால் வெற்றி உறுதி. நன்றாகப் போராட வேண்டும் நாளை ஜனாதிபதியின் கூட்டத்துக்கு யார் யார் போறீங்கள்?

சாத்.3 : பொய் புரட்டு அகந்தை ஆணவம் தீவிரவாதம் பொறாமை சுயநலம் எல்லோரும் போகிறோம். ஜனாதிபதியை இனவாதியாக சமய வாதியாக பிரதேசவாதியாக மாற்றப் பிளான்.

சாத்.2 : கோட்டை விட்டு விடாதேயுங்கோ இது கடைசி சந்தர்ப்பம் இதிலே வென்றால் சிறிலங்கா சுடுகாடு தான் தோற்றால் அதைப் போல இழப்பு வேறில்லை. சமாதானம் வந்தால் நிமிர்ந்திடுவாங்க. எங்க படுகுழி பாழ் தான்.

சாத 3 : நாம் பலபேர் முடியாததும் உண்டா ஜனாதிபதியின் மூளையைக் கலக்கி பீஸ் பீஸ் ஆக்கிவிட்டால் போதும் சிறீலங்கா சொறிலங்காவாகி விடும்.

சாத்.2 : கிழிச்சீங்க ஏதோ பார்ப்போம் போங்க எனக்கு பல முக்கிய வேலை கள் இருப்பதால் வரமுடியாது பெருங் கூட்டமாய்ப் போறீங்கள் தானே புகுந்து விளையாடி பெரும் வெற்றியோடு வாங்க பார்ப்போம்.

சாத்.3 : கவலையே வேண்டாம் முன்னெல்லாம் சில தளபதிகளுக்குள்ள புகுந்தே எப்படி எம் சைனியத்தைப் பெரிப்பித்தோம் இப்ப பாருங்கள் யார் யாரையெல்லாம் மடக்கி சிறீலங்காவை முடமாக்கப் போகி றோம் என்று.

சாத்.2 : நல்லது உன்னில் எனக்கு பெரும் நம்பிக்கையிருக்கு சரி போய் வாரேன்.

## காட்சி - 3

**(ஜனாதிபதி. எதிர்க்கட்சித் தலைவர். முக்கிய அமைச்சர்கள். தளபதிகள். மதத் தலைவர்கள். அரசியல் ஆலோசகர். பாராளுமன்ற உறுப்பினர். )**

**(சாத்தான்கள் வருதல்)**

சாத்.3 : ஐயோ சிலுவைகள் தொங்குதே என்ன செய்வோம் ஐயோ நெருங்க முடியாதிருக்குதே சிலுவைகளைக் கொண்டந்திற்றாங்களே. ஐயோ எரியுதே இப்படி வாங்க எட்டி நின்று பார்ப்போம்.

ஜனா : சகலருக்கும் வணக்கம் யுத்தம் ஒன்று நடந்துவிட்டது. நான் இந்த நாட்டிற்கு ஜனாதிபதியாக வருமுன்னர் சில கொள்கைகளைக் கொண்டிருந்தேன். இனவாதத்தை அன்பால் வென்று புத்த தர்மத்திற்கமைய பிரச்சினைகளைத் தீர்த்து உலகிற்கே பாடமாக ஒரு முன்மாதிரியான நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றிருந் தேன். இந்தக் குறுகிய கால வாழ்க்கைக்குள் பணத்தையே பல வழியில் அடையும் கேவலமான மனித ஆசைகளையும் ஏமாற்று தந்திரங்களையும் கொலை வெறிகளையும் அகற்றித் தர்மத்திற்காக உழைக்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்க ஆசைப்பட்டேன். அதற்காக சமாதானம் அன்பு பொறுமை நேர்மை ஆகிய குணங்க ளைக் கொண்டு பாடுபட்டேன் ஆனால் சிந்தித்ததை சாதிக்க முடிய வில்லையே.

சாத்.3 : முடியுமா உன்னால் நாமிருக்க ஹி ..ஹி.

ஜனா : நல்லோர் தீயோர் பலரின் வற்புறுத்தல்களையும் செயற்பாடுகளை யும் கொண்டது. அரசியலாததால் எப்படியோ என் இலக்கை மாற்றி யுத்தம் புகுந்து கொண்டது.

சாத்.3 : (ஹி...ஹி புகுந்து கொண்டதாம் என்ன பாடுபட்டு புகுத்தினேன் நான் முட்டாள்)

சாத்.4 : ஆமாம் ஆயுதமே வாங்காமல் பின் அடிச்சியே சும்மா கிடந்த ஆயுதங்களை என்ன மாதிரிப் பாவிச்சோம்.

ஜனா : படைவீரன் என்றால் றோபோவா? அன்பு, தியாகம், இரக்கம், பாசம், பற்று எல்லாம் அபரிதமாகக் கொண்டவன் அவன் அவனைப் போய் செத்துப்போ என்பது எப்படி முடியும்? என் குடிமக்களை நானே சாகடிக்க வேண்டி வந்தது நான் மிக வேதனை அடைந்துள்ளேன் இனிமேல் இதுமாதிரிச் சம்பவங்கள் நடக்கவே கூடாது.

சாத்.3 : அதையும் தான் பார்ப்போமே.

ஜனா : அதற்காகத் தான் உங்களைக் கூட்டியுள்ளேன். தயவு செய்து உங்கள் கருத்துக்களை ஒழிவு மறைவின்றிக் கூறுங்கள்.

பா.உ : நாட்டைக் காக்கப் போர் அவசியப்பட்டால் இப்படியெல்லாம் முடியுமா மீட்ட நாட்டைப் பிரித்து தமிழரிடம் ஒப்படைக்க நாம் ஒருபோதும் உடன்பட மாட்டோம்.

சாத்.3 : பேசு பேசு நல்லாய்ப் பேசு விடாதடா மச்சி.

ஜனா : நீங்கள் பிழையாகப் பேசுகிறீர்கள். தமிழ் இளைஞர்கள் எம் பங்கைப்

பிரித்துத்தாவென்று பிழையான வழிகளைக் கையாண்டனர். அதற்காக ஏனைய் இளைஞர்களைக் கட்டாயப்படுத்திப் படையில் சேர்த்துப் பயங்கரவாதிகளாகினர். பேச்சுவார்த்தை மூலம் அவர்கள் குறைகளைத் தீர்த்து சகலரும் சமாதானத்துடன் சந்தோஷமாக தலை நிமிர்ந்து வாழ வழிசெய்ய வேண்டும் என்று தான் பாடுபட் டேன். அதெப்படியோ புத்த தர்மம் புகுத்தப் போய் யுத்த தர்மமாய் மாறியது.

சாத்.2 : முட்டாள் என்னைப் பற்றிய மரியாதை கொஞ்சமாலும் இருந்ததா உனக்கு?

பிஷப் : கௌரவ தலைவரே புத்த தர்மம் கிறிஸ்தவ தர்மம் எல்லாம் ஒன்று தான். கடவுளின் கட்டளைகள் என்றுமே மாறுவதில்லை. அறிவு ஞானம் புத்தி தேவபயம் உள்ளவர்களிடம் பிறர் சிநேகிதம், பொறுமை, நீதி, நேர்மை சமாதானம் எல்லாம் இருக்கும். தேவ பயம் அற்றவனிடம் ஆணவம் இறுமாப்பு ஆடம்பரம் அகங்காரம் கோபம், களவு, கொலை வெறி ஆகிய பேய்கள் உறைந்திருக்கும். ஒரு கன்னத்தில் அடிப்பவனைத் திருப்பி அடி என்று எமது வேதம் கூறவில்லை. பூமிக்கும் மனித வர்ககத்திற்குமுள்ள தொடர்பு பற்றி பைபிள் கூறுவது "துன்மார்க்கரோ பூமியிலிருந்து அறுப்புண்டு பேவார்கள். துரோகிகள் அதிலிராதபடிக்கு நிர்மூலமாவார்கள்" (நீதி மொழி 2-22)

மரணத்தின் பின் பாவியானவன் கொண்டு செல்வது என்ன? எனவே எம் ஒவ்வொரு செயலிலும் இறை சிந்தனை மட்டுமே இருத்தல் வேண்டும்.

சாத்.4 : பிரபு இவன என்ன பண்ணலாம் குருசோட நிக்கிறானே.

சாத்.3 : அந்த பாராளுமன்றத்தானை உசுப்பிவிடு

பா.உ : தலைவர் அவர்களே, விரலுக்கேற்ற வீக்கம் வேண்டும் பயங்கர வாதிகள் எப்படி நாடு கேட்கலாம். அவர்களுக்கேன் தனிநாடு ।ிகச் சிறுபான்மையினராக இருந்து கொண்டு நாடாம் நாடு கிறிஸ்தவம் குறுகிய மனப்பான்மை கொண்டது ஏனைய மதங்களை ஏற்றுக் கொள்ளாதது தன்னைப் பின்பற்றாதவன் பரலோக இராச்சியத்துள் பிரவேசிக்க முடியாதென கிறிஸ்து சொல்கிறார். எப்படி இருக்கு பகிடி.

ஜனா : சரி, கோபப்படக் கூடாது அமருங்கள். இந்து மதக் குரு என்ன சொல்கிறீர்கள்?

இந்துகுரு: இன்று மனிதன் இறை கோட்பாடுகளை மதிப்பதில்லை. ஒரு எறும்பைக் கொல்வதும் பாவம் என்கிறது. எம்மதம் அப்படியிருக்க புலாலுண்ணும் 95 வீதமான எம் இந்துக்களின் கதியும் என்ன? கூன், குருடு, சொத்தி, நாய், பேய் என்று பிறப்பதா? மதம் சொல் வதைக் கடைப்பிடிக்க முடியாதவன் மதத்திலிருப்பதில் பலன் என்ன?

பா.உ : இந்தா பாருங்கள் நாட்டைப் பிரிப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் பிரித்துக் கொடுத்தாலும் அவங்க தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டுதான் இருப்பாங்க. போட்டி, பொறாமை ஆூர்க்கம், சுயநலம் எல்லாம் அதிகமாகவே கொண்டவன் தமிழன் தீண்டாமை என்ற சுயநலம் கொண்டோாக்கு தனி நாடா?

தமிழ் பா.உ : மேன்மை மிகு தலைவர் அவர்களே ஏனைய கனவான்களே தமிழர் பயங்கரவாதிகள் சுயநலமிக்கவர் ன்று பச்சை குத்தாதீர்கள் அன்பு நீதி பண்பு இரக்கம் வீரம், எல்லாம் அபரிமிதமாகக் கொண்டவன் தமிழன் முல்லைக்கு தேர் தந்தான் பாரி நீதி பிழைத்ததே என உயிர்விட்டான் பாண்டிய அரசன் நீதிக்காக தன் ஒரே அருமை மைந்தனைக் கொன்றான். மனுநீதிச் சோழன். எல்லோரும் தமிழர் தானே? எம்நாட்டு நிர்வாகத்தில் குறையுண்டு அதனால் தமிழன் முதலில், அகிம்சா வழியில் போராடினான். சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட போது குண்டர்களால் அடித்து அவமா னப்படுத்தப்பட்டு ஆத்திரத்துடன் திரும்பியவன் ஆயுதத்தை எடுத் தான் பயங்கரவாதியானான். அவனைப் பயங்கரவாதத்திற்கு இட்டுச் சென்ற பாவம் யாரைச் சாரும்?

சாத்3. : (அது செய்தது நானடா முட்டாள் என்ன பாடுபட்டேன் தெரியுமா முண்டம்)

த.பா.உ : ஒருவனது மனக்குறை மனிதத்துவத்துடன் அணுகப்படின் அவன் ஏன் போராடுகிறான்? கடந்த காலங்களில் தொலை நோக்குள்ள நேர்மையான தலைவர்கள் இல்லாததால் நாடு அவமானத்திற்குள் ளானது. இப்போதோ ஜனாதிபதி அவர்கள் பேச்சு, செயல் எல்லாம் நம்பிக்கையளிக்கிறது. எனவே உங்கள் முயற்சிகளுக்கு நாம் பக்க பலமாயிருப்போம்.

சாத்.3 : (போட்டானே போடு நடுங்குதடா)

ஜனா : போதகரய்யா உங்கள் கருத்தென்ன?

போத : சண்டை கொலை என்பன மன்னிக்க முடியாத பாவங்கள் முஸ்லிம்

சகோதரர் பைபிளின் பழைய ஏற்பாட்டுடன் நிற்பவர்கள் கிறிஸ்துவை கடவுளாக ஏற்றுக் கொள்ளாதவர்கள் தச்சன் மகன் கிறிஸ்துவோ எமது மீட்பர் எனப் புறக்கணித்தவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் கிறீஸ்து தான் தாவீது அரசனின் வம்சம். தான் அரச பரம்பரை எனத் தன்னை உயர்த்தியதில்லை பாவிகளையும் துன்பப் படுவோரையும் மீட்கவே வந்தேன் என்றார் கிறிஸ்து உபாதைப்பட்டு நம் பாவங்க ளுக்காக மரித்து நம்மை மீட்டார் இறுதிக் காலம் நெருங்குகிறது. அதற்கு முன் பூமியானது பகுதி பகுதியாய் அழிய ஆரம்பிக்கும். ஆரம்பித்தும் விட்டது இறுதியாக எவராலும் அழிக்க முடியா சிலை ஒன்று தோன்றும். அதற்கு உயிர் கொடுக்கப்படும். அது தன்னை வணங்காதோரைக் கொலை செய்யும் பின்னர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வானத்தில் நிகழும் இறந்த யாவரும் உயிர்த் தெழுவர். தற்சமயம் ஊனுடலுடன் கடவுளுடன் பரலோகத்தில் உள்ளவர்கள் இயேசுவும் தேவதாயும் தான் ஏனைய பரிசுத்தவான் களின் உடல்களும் அழியாது பூமியிலேயே உள்ளது. இறுதி நாளில் யாவரும் உயிர்த்தெழுவர் பின் சகலரும் தீர்ப்புக்குள்ளாவர் இவை பைபிள்களில் உள்ள நிஜம். இப்போது அழிவு ஆரம்பித்துவிட்டது. எனவே கிறிஸ்துவின் போதனைக்கேற்ப வாழவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

சாத்.3 : இந்த மதகுருமாருக்கெல்லாம் அரசியலில் என்ன வேலையென்று இங்கு கூப்பிட்டாங்களோ குருசோட வந்திருந்து காரியத்த கொடுக்கி றாங்களே நாசமாய்ப் போவாங்கள்?

அமை : இதுவரை சிறுபான்மை மக்களும் படையினரும் மிகவருந்தி அழிந்திருக்கின்றார்கள். சிங்களவரும், தமிழரும் பூனையும் எலி யும் போல் இருக்க வேண்டாம் எனவே சிறுபான்மையினருக்கு அவர்கள் பூரண திருப்தியடையக் கூடிய தீர்வைக் கொடுத்து அவர்களுக்கு தம் நாடு என்ற உரிமையோடும் பெருமையோடும் சகோதரத்துவமான நட்புறவோடும் எம்முடன் வாழச் செய்யுங்கள் நட்பு மகிழ்ச்சியின் பிறப்பிடம்.

ஆவோ (அறமும் அறிவும் நிரம்பிய உத்தம தலைவர் என்று தாங்கள் போற்றப்படுவதை விரோதிகள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள் அதனால் பிழையான பாதையில் இட்டுச் செல்லப் பார்ப்பீர்கள் எதற்கும் கலங்காது முடிவெடுங்கள்.

சாத்.3 : (என்னடா இவங்களுக்கெல்லாம் மூளை பிசகா எப்படியெல்லாம் இருந்தவங்க இப்படி மாறிவிட்டாங்கள் ஐயோ. ஐயோ என்ன செய்யலாம்.)

பா.உ : நாம் பெரும்பான்மையினம் என்பதை மறுக்க முடியுமா?

சாத்.4 : (சபாஷ் நீதான் மச்சான் மனுஷன் நல்லாப் பேசறாய்)

எ.கட்சி

தலைவர்: இது தவறு திரும்பவும் பழைய குருடி கதவைத் திறவடி என்றபடி பேசாதீர்கள். காடொன்றில் பெரும்பான்மையாக இருக்கும் ஒரு மிருக இனம் தனக்குத் தான் காடு சொந்தம் என்று சொல்ல முடியுமா? நாட்டில் மட்டும் ஏன் இந்த வாதம் பிழையான வாதங்களை விட்டு மனிதத்துவத்தை மதித்து ஜனநாயகத்தை நிரம்பிய நல்லதொரு தீர்வை எடுங்கள். ஒரு காலத்தில் தமிழரும் 50 வீதமாக இருந்த வங்க தான் அதனால்த்தான் ஐக்கிய தேசியக் கட்சியாக செயல்பட்டார் கள். யுத்தத்தால் நாடு அழிந்து ஏளனத்துக்குள்ளாகியுள்ளது. பொரு ளாதாரம் சீர்குலைந்துள்ளது. பூமி சபிக்கப்பட்டு உத்தரிப் புஸ்தலமாகி யுள்ளது. இனமதப் பேதம் வேண்டாம் இறைவனுக்கு பயந்து மனிதர் என்ற பண்புடன் வாழ்வோம் அதற்குரிய நடைமுறைக ளுக்கு எதிர்க்கட்சியாகிய என் கட்சி பூரண ஆதரவு வழங்கும் தீய சக்திகளின் பித்தலாட்டங்களுக்கு இடம் கொடாது செயல்படுவோம்.

சாத்.3 : ஐயோ மச்சானுக்கும் மண்டை கலங்கிப் போச்சு முன்பு எமக்கு எப்படிப் பயப்பட்டான் பாத்தியளா? பேச்சு சுத்தமாயிருக்கே இந்த குருசுகள் இல்லாவிட்டா குதிச்சிருப்போம் அவர்கள் வாயுக்குள்ள

ஜனா : இவ்வவவு நேரமும் நல்ல ஆன்மீகமான தரவுகளை முன்வைத்து எனது சிந்தனைக்கு பக்கபலமாய் இருப்பதை தெரிவித்ததற்கு நன்றி. குறுகிய இன மத பிரதேச வெறி வேண்டாம் முழு மக்களும் நலன் பெற பரந்த மனத்துடன் ஒத்துழைப்பு தாருங்கள் நாம் எல்லாம் மனிதர்கள் ஒருவரை ஒருவர் மதித்து வாழ இறைவன் அருள் புரிய வேண்டு மெனப் பிரார்த்தித்து இக்கூட்டத்தை நிறைவு செய்கிறேன். அனைவருக்கும் நன்றி வணக்கம்.

(எல்லோரும் போன பின்)

சாத்.3 : அதோ கடவுள் பெயர் சொல்லிப் பாடறாங்க வலிக்குதே வாங்க ஓடிப் போவோம் (சாத்தான் 1 இடம் போகின்றார்கள்)

சாத்.1 : நடந்ததெல்லாத் தெரியும் சே ஏமாற்றம் அவமானம்! இனியும்

நம்பிக்கை இருக்கா முட்டாள்கள் முட்டாள்கள் மூதேவிகள் இவ்வளவு பேர் போயும் ஒரு சிறு வாக்கு வாதம் கூட நடக்கலையே என்ன வேடிக்கை பார்த்து நேரத்தை வீணடிச்சது தான் மிச்சம்.

சாத்.6 : ஆம் தலைவா இவங்க எல்லாம் அரை மைல் தூரத்தில் நிண்டு கீ.கீ எண்டு சத்தமா சிரிச்சுக்கொண்டிருந்தாங்க. நான் வலிக்க வலிக்க ஒரு எம். பி. காதுக்குள்ளால போக என்னைப் பார்த்து நக்கலடிச்சு சிரிச்சாங்க அதனால

சாத்.1 : அதனால என்ன கோள்மூட்டி உன்னால என்ன முடிஞ்சுது எனக்கு கோள் சொல்லத்தான் முடிஞ்சுது பேராசைத் தளபதிமாருக்கு சொத் தாசை மூட்டி போர் செய்ய இயக்க முடியலையா ஆணவம் இன வாதம் உங்களால் ஒன்றுமே முடியலையே இப்படி கோட்டை விட்டுட்டீர்களே சோம்பேறிகளா.

எல்லாம் : என்ன தலைவா அந்தச் சுவாமியும் போதகரும் பெரிய சிலுவைக ளைப் போட்டிருந்தாங்க. அமைச்சர் கழுத்தில கூட தங்க குருசு ஜனாபதிக்குக் கிட்ட இருந்தாங்க. நாங்க என்ன பண்றது நெருங்க முடியுமா?

சாத்.5 : அப்படியிருக்க நான் எவ்வளவோ எரியும் வலியுடன் எம்பி ஒருவருக் குள் புகுந்து ஆட்டித்தான் பார்த்தேன். அவனும் குதிச்சான் ஆனா அவனை யாருமே மதிக்கல்ல ஏன் நாயே என்று கூட கேட்கல.

சாத்.1 : இப்போ அம்போ என்று விட்டுட்டீங்க இவ்வளவு காலமும் பாடுபட்டு சொறிலங்கா வாயாக்கி வைக்கத் திரும்ப சிறிலங்காவாகப் போயிற்றே எப்படி நரகமாக்கலாம் என்று கனவு காண நகரமாக்கவா விட்டுட்டீங்க. இனி அவங்க எல்லோருமே சிலுவை அணிந்தாலும் ஆச்சரியப்படறதுக்கில்ல. அப்படியானா இங்கு இருக்க இடமில்லாம நாமெல்லாம் திரும்ப நரகத்துள் புதைய வேண்டியது தான்.

சாத்.4 : ஐயோ திரும்ப அங்கேயா?

சாத்.3 : இப்போ எல்லா நாடும் பாவத்தில் தோஞ்சு தானே இருக்கு இது ஒரு சிறு தீவு தானே.

சாத்.3 : பாவத்தால நம்ப பூமிக்கு கலைக்கப்பட்ட காயீனிலிருந்து இன்று வரை மனிதனை எப்படி வசப்படுத்தியிட்டோம். இப்போ பயமேன்.

சாத்.1 : அந்த யேசுவ அந்தப் பெரிய மலையுச்சிக்கு அன்று கொண்டுபோய் எல்லா உலக இன்பங்களையும் காட்டி இவையெல்லாம் தருவேன். என்னைப் பணிந்துகொள் என்று கேட்க "அப்பாலே போ சாத்தானே"

(மத்தேயு 5-10) என்று என்னை விரட்டிய அந்த யேசு இப்ப என்ன சாதிச்சுட்டான்? பாடுபட்டு செத்தும் பயனிருக்கா?

சாத்.2 : ஆமாம் பிரபு யூதருக்கு "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள் உங்கள் பிதாவின் இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறார்கள். அவன் ஆதிமுதற் கொண்டு மனித கொலை பாதகனாயிருக்கிறான் (யோபான் 8-44) என்று சொல்லியும் யூதர் காதில் போட்டார்களா?

சாத்.3 : எங்க ஆற்றல் தெரிந்தும் மீட்பாம் மீட்பு! நினைச்சா சிரிப்பா வருது! அன்று இயேசு ஒரு பிறவிக் குருடனுக்குப் பார்வை கொடுத்த போது "காணாதவர்கள் காணும் படியாகவும் காண்கிறவர்கள் குருடராகும் படியாகவும் நியாயத் தீர்ப்பிற்கு நான் இந்த உலகத்திற்கு வந்தேன் (யோவான் 9-30) என்றும் ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாவே மெய்யாவே உங்களுக்குச் சொல்கிறேன் (யோவான் 8-58) என்று கத்தியும் யூதரை நம்ப விட்டோமா?

சாத்.4 : ஆனா இப்போ முடிவு காலம் சமீபிக்கிறதென பலர் வேதகமத்தின் மூலம் அடையாளம் கண்டு மனம் மாறிக் கழண்டு போறான்களே. "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" (லூக்கா 21-33) என்ற கூற்றை உணர்ந்து ஞானஸ்தானம் பெற்று தப்பிக்கப் போறான்களே!

சாத்.1 : மனம் தளராம வாருங்க வேறு இடம் போய் மும்முரமான வேலை செய்தால் எல்லாம் வெல்லலாம். வாங்கோ போகலாம்.



# ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்

பாத்திரங்கள் : குடும்பம் I :- தந்தை - சக்திவேல், தாய் -மணி , மகன் - ரகு
குடும்பம் II:- தந்தை - மோகன், தாய் - சாரா, மகன் - டானி

ரகுவும், டானியும் அயல் வீட்டவர்கள், நண்பர்கள், ஆறாம் ஆண்டில் கற்று வந்தனர். ஒருநாள்.....

## காட்சி - 1

பாத்திரங்கள் : தாய் - மணி, மகன் - ரகு

ரகு விம்மி அழுதபடி தாயாரிடம் வந்தான்.

ரகு : அம்மா, (அழுதபடி) டானி, அடிச்சுப்போட்டான், என்னைப்போட்டு உருட்டி உருட்டி அடிச்சுப்போட்டான். ம்...ம்...ம்...

தாய் : ஏன்டா, அடிச்சான்?

ரகு : தெரியாதம்மா, நான் சும்மா வந்தேன் அடிச்சான்.

தாய் : சும்மா வர அடிச்சானா? ஏனடா, அவனுக்கென்ன விசர் பிடிச்சுட்டுதா? நீ நல்லாப்படிக்கிறாயெண்ட எரிச்சலாக்கும். சரி சரி போ போய் கை, கால் அலம்பி சாப்பிட வா, போ.

## காட்சி - 2

பாத்திரங்கள் : தந்தை - மோகன், தாய் - சாரா, மகன் - டானி

டானி : (அழுதபடி வந்து) அப்பா! ரகு அடிச்சுப்போட்டான், காலாலும், கையாலும் போட்டு அடிச்சுப்போட்டான். மற்ற மாணவரெல்லாம் பார்த்து ஏளனமாய்ச் சிரிச்சாங்க. ம்... ம்...ம்....

தந்தை: ஏன்டா, அடிச்சான்?

டானி : தெரியாதப்பா.

தாய் : என்ன! இது நல்ல சேட்டையாயிருக்கு ஏதோ கொஞ்சம் கெட்டிக்காரன் எண்டா பெரிய இவரா? என்ன தைரியம் இருந்தா என் பையனில கை வைப்பான்? எல்லாம் இந்த சாதிப் புத்தி.

தந்தை: விடு, விடு சிறு பிள்ளைகள் அப்படித்தான் இருப்பாங்க, பிறகு ஒன்றா யிருப்பாங்க. இதையெல்லாம் பெரிசு பண்ணப்படாது.

தாய் : என்னவோ, பண்ணித் தொலையுங்க!

## காட்சி – 3

**பாத்திரங்கள் : சக்திவேல், மணி, ரகு, மோகன், சாரா, டானி**

ரகு : அப்பா, (அழுதபடி) டானி, அடிச்சுப்போட்டான. நான் சும்மா வர ஒவ்வொரு நாளும் அடிக்கிறானப்பா. காரணமேயில்லாம அடிக்கிறானப்பா, உதைக்கிறானப்பா.

மணி : இதென்ன அநியாயம்? நேற்றும் அடிச்சான், போனாப் போகுது என்று விட்டது பிழையாய்ப் போச்சுது, இனி நாளைக்கும் அடிப்பான், எப்போதும் அடிப்பான். கேட்க ஆள் இல்லையெண்டா நினைச்சான் இங்க விடு (கூப்பிடல்) சாரா! ஏய் சாரா! (சாரா வரல்)

மணி : என்ன, உன்ர மகனுக்கென்ன திமிரா பிடிச்சுட்டுது? அதென்னது, சும்மா இருக்கிற பையனைப் பிடிச்சு அடிக்கிறதும், உதைக்கிறதும், அவனுக்கென்ன பைத்தியமா பிடிச்சுட்டுது அல்லது திமிரா?

சாரா : யாரு? சும்மா இருக்கிறவன் என் பையன் தான். சும்மா வர உனர மகன் அடிச்சிருக்கிறான் சிறுசுகள் சண்டைதானே என்று நானும் என் மனுசனும் விட்டா, நீயென்ன பெரிய குதி, குதிக்கிறாய். எங்களுக்கும் தெரியும் குதிக்க. வாயை அடக்கிப் பேசு இல்லையெண்டா நடக்கிறதே வேறு!

சக்திவேல் : வேறா! என்ன பண்ணிருவாய்! யாரு வாயை அடக்கிறது? நீ, யாரு என் மனைவியைப் பார்த்து ஓடர் போடுறதற்கு? பெரிய ஆள் மாதரிக் கத்தாத.

மோகன் : நானேன் , இதற்குள் தலையிட என்று பேசமாலிருந்தனான். இப்ப பார்த்தா, விஷயம் எங்கேயோ போகிறது போலிருக்கு. என்ர பையன் ஒருநாளும் வலுச்சண்டைக்குப் போகமாட்டான். நாங்க அப்படி அவனை வளர்க்கவில்லைத் தெரியுமா?

சக்திவேல் : அப்ப! நாங்க மட்டும் அப்படி வளர்க்கிறோமா? நீ மட்டும் பெரிய மகாத்மா காந்தி, நாங்கள் எல்லாம் இராவணர்கள் என்ன? என்

பையன் எப்படிப்பட்டவன் என்று எல்லாருமே அறிவர்.

சாரா : இந்தா பாருங்க! சும்மா எங்களை வம்புக்கிளுக்காதீங்க. எங்களுக்கும் நல்லாய்ப் பேசத் தெரியும். கொஞ்சம் மரியாதையைப் பார்த்தா ஏறி மிதிக்கப்பாக்கிறீங்க.

மணி : யாரடி ஏறி மிதிக்கிறது? உன்ர பையன் செய்த பிழையை என்னெண்டு விசாரிக்காமல் பெரிய ஆள்மாதிரி கொக்கரிக்கிறாய்.

சாரா : அடிபிடி எண்டாயெண்டால், பல்லை உடைச்சுப் போடுவன். அடியே! யாரையடி அடி என்கிறாய் கீழ் சாதிப் பெட்டை.

மணி : யாரடி கீழ்சாதி? உன்னை விட உயர்ந்த சாதியடி நான். என்ர பிள்ளை கெட்டிக்காரன். நல்லொழுக்கமுள்ளவன் என்ற எரிச்சலில் தானே சும்மா வந்த அவனை அடிப்பித்து வம்பு பண்ணச் செய்கிறாய். எல்லாத்துக்கும் நீ தான் காரணம். ஒரு சொல்லுக்கு கூப்பிட்டுக் கேட்டாயா உன் மகனை ஏன் அடிக்கிறானென்டு கண்டிச்சியா?

சாரா : ஏன் நீ கேட்டாயா, என் மகனை ஏன் அடிக்கிறான் எண்டு, ஏன் நீ கண்டிச்சியா?

மணி : அவன் அடிச்சாத்தானே கேட்கிறதுக்கு, எனக்கு என்ன அவனைப் பற்றித் தெரியாதா?

சாரா : ஐயோ! பெரிய தர்மபுத்திரன், கூப்பிட்டுக் கேள் பார்ப்போம், என்ன நடந்ததென்று.

மணி : நீ கூப்பிடு முதலில் உன்ர மகன.

மோகன் : கூப்பிடுங்க அவங்களை நடந்ததை விசாரிக்க.

(பெயர் சொல்லி அழைத்த பின்னர் ரகு, டானி இருவரும் சிரித்தபடி வருவதைப் பார்த்து யாவரும் திகைக்கின்றனர்)

சக்திவேல் : டே ரகு! உனக்கென்னடா அவனோட கதை. வாடா! என்ன நடந்த தென்று சொல்லு.

டானி : டானி ! என்னடா கழுதை உனக்கு மண்டையில மூளையே இல்லையா? அவனோட என்ன கதை. இப்படி வந்து நடந்ததைச் சொல்லு!

ரகு : அப்பா, மோகன் மாமா! பொறுமையாய் கேளுங்க. டானி எனக்கு அடிக்கவுமில்லை. நானவனுக்கு அடிக்கவும் இல்ல. நாங்க ரி.வி.யில ஒரு படம் பார்த்தோம். அதில இரு நண்பர்கள் சண்டை போட்டதால அவங்க

பெற்றோர் அடிதடி சண்டையில இறங்கினாங்க. அதைப் பார்த்த டானி சொன்னான் என்ர அப்பா எண்டா இப்படிச் சண்டை போடமாட்டார் என்று இல்லைப் போடுவார் என்று நான் சொன்னேன். அவனோ மறுத்தான். நூறு ரூபாய்க்கு சரியென்று பந்தயம் பிடித்தோம். பரிசோதனையில் இறங்கினோம் நடந்ததைப் பார்த்திட்டோம்.

சக்திவேல் : டே முட்டாள் கழுதையளே! இப்படியும் பண்ணலாமா?

மோகன் : என்ன தைரியம் உங்களுக்கு? முட்டாள்கள்.

ரகு : அது நீங்கதானப்பா, அடிச்சுப்போட்டான் என்றழுதா, உடனேயே நம்புறதா? உண்மை அறிய எங்க, எதில அடிச்சான் என்று முதலில் அறிய வேணும். பின்னர் அதற்கு சாட்சியம் இருக்கா என்று அறிய வேணும். எதையும் தீர விசாரித்தறியோணும்.

டானி : ம்... இது எதுவும் விசாரிக்காது வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிட்டாங்க. சண்டைக்கு எதையும் தீர விசாரித்தறிய வேண்டும். சும்மா காதில கேட்பது சரியெண்டு எடுக்கப்படாது. கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய் தீர விசாரித்தறிவதே மெய்.

ரகு : ஆமா, ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம் என்பதை ஆறாம் வகுப்புப் படிக்கும் நாங்க சொல்லித்தர வேண்டியிருக்கு! போங்க போய் புத்தியோட சீவியுங்க.

சக்திவேல் : எங்களுக்கு நீங்கள் படிப்பிக்கிறீங்களா?

ரகு : அதிலென்ன சந்தேகம்? நீங்க எங்கட முறைப்பாட்டைக் கேட்டதும், எங்கள் இருவரையும் அழைத்து நடந்தது என்ன? என்னத்திற்காகச் சண்டை? என்பதை அமைதியாக விசாரித்திருந்தால், நாம் தொடர்ந்து பொய் பேச முடியாது பிடி குடுத்திருப்போம். உண்மையும் வெளி வந்திருக்கும். எதையும் மனதில் தோனியபடி கொதிக்காது பேசி தீர்க்க வேண்டும். சரி, டானி வாடா! இவங்களோட எல்லாம் என்ன பேச்சு.

(தும் பிழையை உணர்ந்த பெற்றோர் சிறு சிரிப்புடன் வீட்டினுள் மறைந்தனர்)

# முற்பகல் செய்வது பிற்பகல் விளையும்

பாத்திரங்கள் : ரவி, மனைவி - மாலா, பிள்ளைகள் - ராகவன், சீலி, சசி, ரவியின் தாய் - மரகதம்மா, வேலைக்காரி - மணி

## காட்சி – 1

பாத்திரங்கள் : ரவி, மனைவி - மாலா, வேலைக்காரி - மணி
இடம் : அகதி முகாம்

ரவி : மணி ! நாங்களும் உன்னுடன் வருகிறோம் 2 அல்லது 3 நாட்களுக்குள் வேறு இடம் பார்த்துக் கொள்வோம்.

மாலா : ம்.... எப்படியெல்லாம் காலம் மாறுது.

## காட்சி – 2

பாத்திரங்கள் : பூபதி, மணி, ரவி

எல்லோரும் பூபதி வீட்டிற்குப் போகிறார்கள். இங்கு பூபதி, கணவர் 2 பிள்ளைகள்

பூபதி : மணி, என்னமாய் இளைச்சுப் போனாய். வா!

மணி : அக்கா, இவங்களும் 2 நாட்களுக்கு இங்கு தங்க வேண்டியிருக்கு பரவாயில்லையா?

பூபதி : இதென்ன கேள்வி, சாப்பாடு பிரச்சினையில்லை, தரலாம். ஆனா.... இரண்டு அறை தானேயிருக்கு எங்களுக்கே இடமில்லை இவங்க எப்படி படுக்கிறது, இருக்கிறது?

மணி : அக்கா, அந்தக் கோடைக் கொட்டகை எப்படியிருக்கு?

பூபதி : அது நல்லாத்தானிருக்கு, ஆனா மண்ணிலம் இந்த மாரிக்கு எப்படி...?

ரவி : பரவாயில்லை 2 நாட்கள் தானே, அதற்குள் வேறுவீடு பார்த்?துவிட மாட்டோமா?

பூபதி : சரி, சரி மணி போய் அதை ஒருக்கா கூட்டிவிட்டு இவங்களைக் கொண்டு போய்விடு. நான் ரீ போடுறன்.

மணி : சரியக்கா, அம்மா வாங்க!

(கொட்டிலை கூட்டப் போகிறாள்)

## காட்சி – 3

பாத்திரங்கள் : பூபதி, மணி, பூபதியின் கணவர் சிங்கம், ரகு, மாலா

பூபதி : என்னடி மணி, 2 நாள் என்று வந்தாங்க 6 நாளாச்சு, கொட்டில் காணும் என்று விட்டு இப்போ எ்ல்லாரும் இங்க தான் இருக்கிறாங்க. என்ர பிள்ளையையும் படிக்கவிடாமல் ஒரே விளையாட்டு. விடிஞ்சாக் காணும் வெளிக்கிட்டுடு வாங்க. ஒரு அரிசியை வாங்கிப் போட்டா போதுமா? வரவென்ன? செலவென்ன? நீயாவது சொல்லேன்.

மணி : ஆமக்கா, என்னப்படுத்தின பாடு அதுவும் அந்தக் கிளவி ஒரு நிமிஷம் கூட ஆறவிடாது தோட்டத்துக்கு நீர் பாய்ச்சணும், பின் சமைக்கணும், பின் தென்னோலை பின்னணும், வீடு வாசல் கூடக் கூட்டமாட்டாங்க அது நான் தான் மாடுகளில் பால் கறக்கணும், மாட்டுக் கொட்டில் சுத்தம் செய்யணும் அப்பப்பா!

பூபதி : ஏன், வேலன் என்ன செய்கிறவன்?

மணி : காய்கறி பறித்துக் கொண்டுபோய் சந்தைக்கு கொடுப்பான். பாலைக் கொண்டுபோய் பாலச் சந்தையில கொடுப்பான். தேங்காயை வண்டியில போட்டுக் கொண்டுபோய் வித்துப்போட்டு வருவான். கிடுகுக் கட்டுக்களைக் கொண்டு போவான். பின் தன் வீட்டுக்குப் போய் விடுவான்.

பூபதி : அம்மாடி இப்படி வேலை வாங்கிப்போட்டுத்தான் உனக்கு மாதம் ஆயிரம் பிச்சைக்காசு சம்பளம்.

மணி : அது கூடத் தரப்படும் பாடு! ரகு ஐயா, காலை பள்ளிக் கூடம் போனா வர 5 மணியாகும். மாலா அம்மா, ஒண்டு கூடச் செய்யாது. கதைப் புத்தகம் படிச்சுக் கொண்டிருக்கும். மரகதம்மா, எங்களைத் துரத்தித் துரத்தி வேலை வாங்கும். ஒரு நிமிஷம் கூட இருக்க விடாது. தாற பிளேன் ரீயைக் கூட கெதியாகக் குடிக்கவேணும். இப்படி எங்களை மாச்சுத்தான் அந்தப் பெரிய பங்களா, கார், கடையெல்லாம் கட்டினாங்க.

பூபதி : கடையா?

மணி : ஓமக்கா, பெரிய கடை ஒனறு இப்பதான் கட்டி முச்சாங்க. வாடைக்குவிட எண்டு அதனால் கையில் இருந்த காசெல்லாம் செலவாச்சாம். தீடீரென ஆமி அடிச்சதால எல்லாத்தையும் விட்டிட்டு ஓடி வந்தோம். வரும் வழியில் எத்தனை சனம் செத்தாங்க தெரியுமா? அதில தானே பெரியய் யாவும் செத்தார். அது கொஞ்சம் நல்ல மனுசன். அது ஒண்டு தான் கொஞ்சம் இரக்கம் காட்டும். இதுகள் எல்லாம் உதவாதுகள்.

பூபதி : இதுகளையா பாவம் பார்க்கிறோம்? வரட்டுவிடு

சிங்கம் : வந்த இடத்தில என்ன செய்கிறது. நாளைக்கு நாங்களும் இப்படித்தான்.

பூபதி : நீங்க, சும்மாயிருங்க வாய மூடிக்கொண்டு. இப்படிப்பட்டதுகளுக்கு இரக்கப் படுறதே பாவம் வரட்டும்.

மணி : ஆமாக்கா, கலைச்சுவிடுங்க, வாராங்க.

(ரகு, மாலா வரல்)

பூபதி : என்ன வீடு கிடைச்சுதா?

ரகு : அதென்ன இப்படியொரு காலம், ஒரு அறை கூட இல்லை. எல்லாம் நிறைந்து வழியுது. வாடகையெண்டால், அப்பப்பா! கொழும்பில கூட இப்படியில்லை.

பூபதி : இந்த பாருங்க எங்களுக்கும் பெரிய கரைச்சலாயிருக்கு என்னால ஒன்றும் ஏலாது. இவள் மணி பாவம் இவ்வளவு காலமும் கிடந்து ஓடாய்த் தேய்ந்து போய்க்கிடக்கிறாள். அவள் ஓய்வெடுக்கனும். நீங்க வேணுமான கொட்டிலில சமைச்சு உங்க பாட்டைப் பாருங்க.

மாலா: சரி, சரி நாங்க எங்க பாட்டைப் பார்க்கிறோம்.

ரவி : அது சரி தானே நாங்க பார்க்கிறோம். கொட்டிலுக்கும் வாடகை தாறோம்.

பூபதி : ஏதோ மனச்சாட்சிப்படி செய்யுங்கோ.

## காட்சி – 4

பாத்திரங்கள் : மரகதம், மணி, மாலா

கொட்டிலில் மரகதம், மணி

மணி : அம்மா! என்னம்மா நீங்கதானா சமையல்?

மரகதம் : மனுசன் செத்ததோட நானும் செத்து தொலைஞ்சிருக்கலாம். என் விதி இப்படி 75 வயதில ஏலாத காலத்தில் இப்படி ஒரு தலைவிதி. கையில ஓர வெத்தில வாங்கக் கூடக் காசில்ல.

மணி : ஏனம்மா! அங்க உழைச்சதெல்லாம் எங்க?

மரகதம் : உழைச்சததானே இவங்ககிட்ட கொட்டினேன். கொஞ்சம் கைச் செலவுக்கு எடுத்துப்போட்டு மகனிட்ட தானே எல்லாம் கொட்டினேன். அவன் வீடு, வாசல், கார் என்று கொட்டிப்போட்டு வெறுங்கையோட வந்திருக்கிறான். நல்லவேளை உத்தியோகம் எண்டபடியாச் சம்பளம் எடுக்கிறான். அதில எனக்கு ஒரு சதம் கூடத் தாரதில்ல. மாலா எண்டவள் சாப்பாடு கூடத் தரமாட்டாள். இரவில மட்டும் அவன் இருக்கிறான் எண்டு மாமி சாப்பிடுங்கோ என்பாள். ஒரு பூனைக்கு வைக்கிற சாப்பாடு தான் இருக்கும். என்ன செய்கிறது. அவனிடம் சொல்ல முடியுமா? யாரிடம் சொல்ல?

மணி : ஏன் சொன்னா என்ன?

மரகதம் : சொன்னா என்ன அவன் பெண்டில் பக்கம் தானே நிற்பான். கிளவிய கலைச்சுவிட்டிடோணும் எண்டு நினைப்பான். நான் எங்க போவன்?

மணி : மருமோள் எங்க போட்டா?

மரகதம் : வீடு பாக்கிறேன் எண்ட சாட்ல ஊர்சுத்த போயிட்டாள். சாப்பாடு நேரம் வருவாள் பஞ்சம் பாடி ஒரு அகப்பை சோற்றை மூஞ்சியை நீட்டியபடி தருவாள்.

மணி : ஏன் நீங்க போட்டு சாப்பிட்டா என்ன?

மரகதம் : அதெப்படி? காச்சிறதே கொஞ்சம் அதில பிள்ளைகள் சாப்பிட்டா நான் சாப்பிட்ட மாதிரித்தானே?

மணி : பாருங்க காலம் எப்படி மாறுதெண்டு?

மரகதம் : நீ சொல்லிக்காட்றியா? நான் உனக்கு செய்ததுக்கு இப்ப உத்தரிக்கி றேன். எனக்கு கவலை என்னணடா இவள் மாலா நடிக்கிறாளே என்னை வடிவாய் பராமரிக்கிற மாதிரி அதுதான் கவலை. அவன்

வந்ததும் மாமி பாவம் அவதான் சமையல் நான் வீடு தேடி அலைஞ்சது தான் மிச்சம் என்பாள். மாமி பாவம் அவவால இயலுமா நாளைக்கு நான் விடிய எழும்பிச் சமைத்துப்போட்டு போகணும் என்பாள்.

மணி : உண்மையாகத்தான் சொல்றவாயிருக்கலாம் தானே?

மரகதம் : அப்படியெண்டா உன் அக்காவோட என்னை எப்படித் திட்டியிருக்கிறாள்.

மணி : மகனிட்ட சொல்றது தானே?

மரகதம் : அவன் யார் சொன்னதென்பான். உன் அக்காவைச் சொல்ல சண்டை பெரிதாக, சாகிறநமக்கு போக்கிடமில்லாத எனக்கு என்னத் துக்கு இதெல்லாம் நான் செய்த பாவம் என்று இருக்கிறேன். பார்த்தியா நீ கஷ்டப்பட்டாய் இப்போ ராணி மாதிரி இருக்கிறாய். உன்னைக் கஷ்டப்படுத்தினேன் உன் முன்னாலே கஷ்டப்படுகிறேன். இது தான் முற்பகல் செய்கிறது பிற்பகல் விளையும் என்பார்கள்.

மணி : சரி, நான் வாறேன்.

(மருமகள் வரல், மணி போதல்)

மாலா : என்னது சமைச்சாச்சா? சும்மா அலம்பிக் கொண்டிருக்கிறீங்க. பசிக்கிறது சரியான பசி. சாப்பிட்டு விட்டு இந்தத் திசையில் வீடு தேடணும். காலெல்லாம் வலிக்குது. என்ன மாதிரி காரும், மோட்டார் சைக்கிளுமாயிருந்த எனக்கு இப்படி ஒரு நிலவரம் எல்லாம் யார் கண்ல முழிச்சு எழும்புறேனோ?

மரகதம் : ஏண்டி மகளே! என் மகனையா சொல்கிறாய்?

மாலா : ஏன் நான் எழும்பி வரும்போது அவர் முழிச்சுக்கொண்டா இருக்கிறார்? எந்தக் கண்படுகிறதோ நாள் முழுவதும் விடிஞ்சால் போலதான்.

மரகதம் : நீ என்ன சொல்கிறாய்? நான் தானே உனக்கு முன்னால் எழும்பி காப்பி போடுறது என்னில தானே முழிப்பாய் நான் என்ன செய்ய?

மாலா : நீங்க எழும்பாம இருந்தா நல்லது. 6 மணிக்கு காப்பி குடிக்காட்டா என்ன செத்தா போயிடுவீங்க?

மரகதம் : சரியடியம்மா இனிமேல் எழும்பல.

## காட்சி – 5

பாத்திரங்கள் : ரவி, மாலா, மரகதம்

ரவி : (படுக்கையில்) மாலா! அம்மா இன்னும் எழும்பலையா?

மாலா : எழும்பல, பாவம் தானே ஏலாதுதானே கிடக்கட்டும் நான் போடுறேன் காப்பி (போதல்)

ரவி : அம்மா! ஓய் அம்மா! (மரகதம் எழல்) என்ன 7 மணியாகிறது. நான் வேலைக்கு போறதில்லையா?

மரகதம் : (மாலாவிடம் போய்) என்ன செய்ய?

மாலா : அவருக்கு காப்பி போட்டுட்டேன். நீங்க ரீ ஊத்திக் குடியுங்க. அவருக்கு கொடுத்துவிட நூடில்ஸ் போட்டேன். எங்களுக்கு பாண் வாங்குவோம்.

ரவி : மாலா! போயிட்டு வாறேன்.

மாலா : சரிங்க.

மரகதம் : பாண் வாங்கப் போகவா?

மாலா : இனி யாரு போறது? மதியச் சாப்பாட்டைச் சமைக்கணும் தானே இந்தாங்க (கொடுத்தல்) இந்த அரிசியைப் போடுங்க. சம்பல அரையுங்கோ அவருக்கு கடையில ஏதாவது கறி வாங்கியாறேன். (போதல்)

மரகதம் : கடவுளே! நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு இப்படியாச்சே, மணிக்குத்தானே அடிக்கடி சம்பலும் சோறும் கொடுப்பேன். நான் செய்த தவறு இப்போ இவள் செய்கிறாள். இனி இவளுக்கு யார் அளக்கப்போகிறார்களோ! பெத்த பிள்ளையெண்டா இப்படி செய்யுமா? ஒருநாளும் மருமகளோட சீவிக்கப்படாது. பெத்ததுக்கும் சொல்ல வழியில்லை பசிக்குதே. (அழல்) சமைக்கணுமே!

மாலா : (மாலா வரல்) என்ன உலகம் வீடே கிடைக்கல. அவருக்கு மட்டும் இறால் கறி வாங்கினேன். எண்ணி 4 இறால் 40 ரூபாவாம். நாம் சம்பலோட தான் சாப்பிடணும். நீங்க சாப்பிட்டு வசந்தா வீட்ல போய் வீடு விசாரிச்சுட்டு வாங்க. எனக்கு கால் வலிக்குது. (மரகதம் போதல், ரவி வரல்)

ரவி : பிள்ளைகள் வரக் கொஞ்சம் நேரமாகும். அதுதான் வந்திட்டேன். அம்மா எங்க?

மாலா : யாருக்கு தெரியும்? வீடு விசாரிக்கயெண்டு உலாத்தப்போயிட்டா. அதனால இன்னைக்கு கறியைக் கடையில 100 ரூபாய்கு கறி வாங்கியந்தேன். சாப்பிட்டதும் கிளம்பியிட்டா.

ரவி : இந்தக் கிளடுகளால் பெரிய கரைச்சல் தான். ஒரு பிரயோசனமுமில்ல செலவுதான். வயோதிப மடத்தில் கொண்டு போய் விடட்டா?

மாலா : பாவம் சும்மா கிடவுங்க. எப்படி மரியாதையா வாழ்ந்தவ? வயோதிப மடத்தில விடலாமா? என்ன பேச்சுப் பேசுறீங்க?

ரவி : சரி, சரி நீ தூக்கித் தலையில வைத்தாடு. நான் பிள்ளைகளை கூட்டியாரேன்.

(போதல்)

(கரன் ஓடிவரல்)

கரன் : மாலா! மாலா! கிளைமோர் வெடிச்சு 5பேர் அந்த இடத்திலே சரி, உன் கணவரும் இறந்திட்டார். மாமியும் இறந்திட்டார்.

மாலா : ஐயோ..! நான் என் செய்வேன்? கடவுளே உனக்குக் கண்ணே இல்லையா? இரக்கமே இல்லையா...? நான் என் செய்வேன்... யாரிடம் போவேன்...? என் பிள்ளைகளை என்ன செய்ய! வேலையாகி 2 வருடம் கூட இல்லையே பென்சனும் இல்லையே.. கடவுளே! நீ இருக்கிறீயா? நான் இனி சாப்பாட்டுக் எங்க போக? பிள்ளைகள் படிப்புக்கு எங்க போக? கண்ணிலாக் கடவுளே! நடு வீதியில் பிச்சை எடுக்க வச்சிட்டாயே! ஐயோ, இரக்கமே இல்லையா உனக்கு.

(கதறல்)

# வாளெடுப்பான் வாளாலேமடிவான்

நான் அக்கோவிலின் பக்கத்தே இருந்த ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்தேன். கவலை தோய்ந்த முகத்துடன் வந்தான் அந்த நாற்பது வயதான மனிதன். ஐயா வணக்கம், அருகே உட்காரலாமா? என்று கேட்டான். உட்காரும்படி சைகை காட்டினேன். அருகே அமர்ந்தான். சாமி! எனக்குச் சில சந்தேகம் என் கதையைக் கூறுகிறேன். கேட்டுவிட்டு விடை கூறுங்கள் என்றான். சொல் மகனே! என்று நான் கூறியதும், அவன் கலங்கிய கண்களுடன் ஆரம்பித்தான்.

சாமி எனது பெற்றோருக்கு நாம் மூனறு ஆண்பிள்ளைகள், பெண் பிள்ளைகள் இல்லை. எனது அண்ணா மிக முரட்டுத்தனமானவர். தந்தை அமைதியான மனிதர். தாய் பிடிவாதமானவர். எங்கள் ஊர் நலம்புரி. மல்லாவியில் வயல் இருந்தது. பக்கத்து வயல்காரனுக்கும், எங்களுக்கும் சதா சண்டை, இதனால் ஒருநாள் இரவில் அப்பக்கத்து வயல்க்கார பூதன் என் அண்ணாவை சுட்டுக்கொண்டு விட்டான். சாட்சி கிடையாது. வழக்காடி வெல்ல முடியாது. அம்மாவோ ஆத்திரக்காரி, மிகுந்த கோபக்காரி திரௌபதி சபதம் எடுத்தது போல் கொன்றவனைக் கொன்று பின்தான் என் தலை எண்ணை, தண்ணி காணும் என்று சத்தியம் செய்து சபதமிட்டா. என்னையும் தம்பியையும் தூங்கவிடாது விரட்டி ஓலமிட்டு அழுதபடி இருந்தா. தம்பியும் சிறுது முரடன். வா அண்ணா! அவனைப் போய் வெட்டிப்போட்டு வருவோம் என்று நச்சரித்தான். நானோ விவாகமாகி ஒரு பிள்ளையுடன் இருந்ததால் தயங்கினேன். தாயோ அமைதி அடையவேயில்லை. உணவு, உறக்கமில்லாது ஓலமிட்டபடி இருந்தா. எனவே தம்பியுடன் போய் ஓர் இரவு பூதனை வாளால் வெட்டிக் கொன்றுவிட்டு வந்துவிட்டோம். அவன் மனைவியோ மிக அடக்கமும் அமைதியுமானவள். நாலு சிறு பிள்ளைகள் வழக்காடும் வசதியோ, தைரியமோ இல்லாத ஜீவன். எனவே எம்மை ஏன் என்று கேட்க எவருமில்லை. ஐயா, நான் இந்தக் கொலையை சிறிது கூட மனமற்ற நிலையில்தான் செய்தேன். என் தாயின் கட்டளையை புறக்கணிக்க முடியாத நிலையில் தான் செய்தேன். என்பாவமே, ஒரு வருடத்தால் என் தம்பி கொழும்பு போயிருந்த சமயம் இனக்கலவரத்தில் சிக்குண்டு வாளாலே வெட்டிக்கொல்லப்பட்டான்.

இதைக்கேட்ட என் தாய் உயர் இரத்தக்கொதிப்புக்கு ஆளாகி உயிரிழந்தா. எஞ்சியது என் குடும்பம் மட்டும். நானும் வேதனையில் என்னைக் கட்டுப்படுத்த

முடியாக் குடிகாரனானேன். இதனால் வீட்டில் சதா சண்டை மனமுடைந்த என் மனைவி, பிள்ளைகளுடன் தற்கொலை செய்து கொண்டா. நான் ஏன் இந்த உலகில் பிறந்தேன்? எனக்கேன் விரும்பாமலே இத்தனை தொல்லைகளும், துன்பங்களும் பூதன் தானே இக்குற்றங்கள் எல்லாவற்றிற்கும் காரணம்! நான் மரணமானதும் என்ன நடக்கும்? எங்கே போவேன் என்ன ஆவேன்? ஐயா! நான் நாளாந்தம் வேதனையில் வெந்து கொண்டிருக்கிறேன். சமூகத்திலும் எவரும் என்ன எள்ளளவும் மதிப்பதில்லை. கொலைகாரன், குடிகாரன் என்று ஒதுக்குவதால் திருந்திய மனிதனாக வாழவும் முடியாது. சாகவும் முடியாது. தவித்துக்கொண்டிருக்கும் பாவி நான். நான் அமைதி பெற வழியுண்டா? ஐயா! எனக்கொரு வழி காட்டுங்கள் என்றான்.

நான் சொன்னேன் உன்னைத் தற்போது என்னிடம் கொண்டு வந்தவன் இறைவன். நானும் உன்னைப்போல் பல துன்பங்களுக்கு ஆளாகி அவற்றின்றும் மீட்படைய இத்துறவற நிலையை மேற்கொண்டேன். பெண் என்றால் எல்லாப் பெண்களும் ஒரே மாதிரியுமல்ல, ஆண் என்றால் எல்லா ஆண்களும் ஒரே மாதிரியுமல்ல. என் தாய் என் மனைவி இரண்டுமே பெண்களுள் மாணிக்கங்கள். அப்படி அவர்கள் இருந்ததால் பொறுப்பற்று வாழ்ந்து வாழ்க்கையைத் தொலைத்து விட்டுத்தான் இந்த நிலையை அடைந்தேன். நான் ஒரு பெரிய தொழிலதிபர் என்றால் நீ நம்பமாட்டாய். எனது சொந்த இடம் இந்தியாவிலுள்ள காஞ்சிபுரம். பணம், பொருள், காணி, பூமி, ஆடம்பர வாழ்வு, அதிகாரம், பதவி இவற்றால் நிறைவான வாழ்க்கையைப் பெற்றுவிடலாம் என்று நினைத்தவருள் நானும் ஒருவன். அளவுக்கதிகமான செல்வம் பெற்றிருப்பவன். அதை ஏதோ ஒரு பிழையான வழியில்தான் பெறுகிறான். இது அவனுக்கு நிறைவான வாழ்வையோ, மகிழ்ச்சியான மரணத்தையோ அளிக்க முடியாது. தொழிலதிபராயிருந்த நான் தொழிலாளிகளின் கூலியைச் சுரண்டியதால் தான் பெரிய பணக்காரனாயி ருந்தேன். ஒருவன் சந்தோஷமாக வாழ வசதியான உறைவிடம், உணவு, உடை அத்தியாவசியம். இவற்றை நல்ல முறையில் தேட வேண்டியது ஒவ்வொருவனது கடமை. இச்சை, அடக்கம் அற்றவனாயிருந்த நான் அதிக பணத்தைத் தவறான வழியில் சேகரிக்கிறேன் என என் தாயாரும், என் மனைவியும் கூறி எச்சரித்த போதும் நான் அதை உணரவில்லை. மிக ஆடம்பரமாகக் கார், பங்களா, வேலையாட்கள் என வாழ்ந்த நான் தொழில் சம்பந்தமாக போயிருந்த சமயம் இடி விழுந்து என் அருமை தாய், மனைவி,

ஆருயில் மகன், மகள், வேலையாட்கள் யாவரும் அடங்க வீடு வாசல், சொத்து எல்லாம் கருகிப்போயிருந்தது. எனக்குப் பைத்தியம் பிடிக்காதது அதிசயம். நான் அந்த இடத்தை விட்டு மனமாற்றத்திற்காக வங்கியில் கிடந்த பணத்தின் உதவியால் இங்கு வந்து சேர்ந்தேன். மனம்போனபடி வாழ்ந்த நான் என் தவறெல்லாம் உணர்ந்து திருந்தி துறவற வாழ்க்கையை மேற்கொண்டேன். அதோ தெரிவது என் சிறிய வீடு. பைபிளை படித்து வருகிறேன். இப்பொழுது நான் கிறிஸ்துவ துறவி. சமுதாயத்திலிருந்து ஏழைகட்கு என்னாலானதைச் செய்து வாழும் கிறிஸ்தவ துறவி. சைவ சமய கோட்பாடுகளுக்கமைய நாம் மரணத்தின் பின் பிறப்பெடுக்கிறோம். எம் பாவத்திற்கேற்ப சொத்தி, குருடு, முடமாகவோ, நாயாகவோ, பேயாகவோ பிறப்பெடுக்கிறோம். ஆனால் கிறிஸ்தவ சமயத்தில் ஞானஸ்தானத்தால் பாவம் அழிந்து அதற்குரிய பாவப் பிறப்பும் அழிந்து போகிறது. ஆகையால் நாம் சென்ம பாவமற்ற மறுபிறப்படைகிறோம். நாம் சென்ம பாவம் நாலு தலைமுறையாக நின்று நியாயம் கேட்கும். திருமுழுக்கால் கிறிஸ்தவனாகும் போது சென்ம பாவத்தை விட்டு மனம்வருந்தி முற்றாகத் திருந்தி மன்னிப்புக் கேட்டு இறைவனிடம் செல்லும் பொழுது சிலுவையில் இயேசுவின் வலது புறத்தில் தொங்கிய மனம் திருந்திய கள்வனுக்கு ஆண்டவர் இயேசு என்ன கூறினார்.

"நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியோடு உமக்கு சொல்கிறேன். (லூக்கா 23:43) என்றார். மனிதனுக்குள்ள எதிர்காலத்தைப் பற்றி பைபிள் என்ன கூறுகிறது. பரதினியப் பூமியில் நித்திய ஜீவன் மகிழச்சி தருவதாய் இருக்கும். நீதிமான்கள் பூமியை சுதந்திரித்துக் கொண்டு என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள். (சங்கீதம் 37-29) என்று கூறுகிறது.

எனவே, மனம் திரும்பி ஞானஸ்நானம் பெறு உன் பாவங்கள் அழிந்து போகும். நீ புதுப்பிறப்பெடுப்பாய். பாவ சங்கீர்த்தனம் பண்ணி பாவமன்னிப்பைப் பெற்று பின் நல்ல கிறிஸ்தவனாகச் சீவி, மரணம் நிச்சயமாக வரும், வந்த பின் நரகாக்கினைக்காளாகாது காப்பாற்றப்படுவாய் என்றேன். ஐயா, இதைக் கேட்டு என் மனம் எவ்வளவு ஆறுதலடைகிறது என்றான்.

தம்பி உலகம் ஒரு நாடக மேடை நாம் எல்லாம் நடிகர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை சீவித்து மரிக்க எமக்கொரு தேதி அந்த ஆண்டவன் குறித்திருக்கிறான். அந்தத் தேதியில் அழைப்பான். அப்போது போய் நாம் உண்ட உணவையோ, உடுத்த உடைகளையோ, அனுபவித்த இன்பங்களையோ பற்றி

எள்ளளவும் சந்தோசப்படப் போவதோ நன்மைப் பெறப் போவதோ இல்லை. நாம் இறைவனுக்காக ஆற்றிய சேவைகளைப் பற்றித் தான் தீர்ப்புப்பெற போகிறோம் என்றேன்.

ஐயா! நான் இன்னமும் கொஞ்சம் தெளிவு பெற உங்களுடன் சில நாள் தங்கலாமா என்று கேட்டான். தாராளமாக என்று கூறினேன். அவனை அழைத்துப்போய் உணவழித்து இளைப்பாறவிட்டேன். இரண்டு நாள் அடுத்து அவன் ஞானஸ்தானம் பெற்றான்.

மூன்றாம் நாள்,. எதிரே இருந்த கடையில் நின்று ஒரு பெண்ணுடன் கதைத்துக் கொண்டிருந்தான். பின்னர் வந்து ஐயா, இங்கு வரமுன் நான் ஒரு வீட்டில் தோட்ட வேலை செய்து கொண்டிருந்தேன் என்று கூறினேனல்லவா? அந்த வீட்டுக்கு அருகே இருந்த ஒரு சிறு வீட்டில் வாழும் பெண்ணுடன் பேசிவிட்டு வந்தேன். அவள் கணவன் அவளைப் பிரிந்து போய் ஆறு வருடங்கள் ஆகிவிட்டதாம். அவள் வீட்டு வேலியில் இருக்கும் பாம்பு புற்றுக்கு அடிக்கடி பால் வார்த்துத் தொழுவாள். அப்போது சந்தித்துப் பேசுவோம். நாம் ஏன் விவாகம் செய்து கொள்ளக்கூடாது எனறு ஒருநாள் கேட்டாள். நான் அப்படிச் சிந்திக்வில்லை. எனவே யோசித்துச் சொல்கிறேன் என்றேன். அதுதான் இப்போது கேட்டாள், என்ன முடிவு என நான் விவாகம் செய்ய விரும்பவில்லை என்று கூறினேன். நான் உங்களைப் போலாகி மதத்தொண்டாற்ற விரும்புகிறேன். நீங்கள் என்ன சொலகிறீர்கள்? என்றான்.

நல்லது மகனே! நீ நல்லதைத் தேர்ந்து கொண்டாய். சட்டப்படி விவாகரத்து ஆகாத பெண்ணுடன் சேர்ந்து வாழ்வது விபச்சாரம் அத்துடன் பாம்பை வணங்கும் அவள் பசாசை வணங்குகிறாள். எல்லாம் படைத்த இறைவனின் எதிரி பசாசு அது. பாம்பு ரூபம் எடுத்து ஆதி மனிதனை ஏமாற்றியதால் கோபமடைந்த இறைவன் மனிதனைப் பூமிக்கு கலைத்து பூமியில் கஷ்டப்பட்டு வாழ்வாய் என்று விட்டார். பாம்பு சபிக்கப்பட்ட பசாசு என்று தெரிந்தும் பலர் அதனை வணங்குகின்றனர். அதுதான் இறைவனின் கழுத்தில் இருப்பதாகக் காட்டி மனிதனை மேலும் ஏமாற்றி வருகிறது. எத்தனையோ ரூபங்களை எடுத்து மனிதனுக்கு வாழ்வளிப்பதாகக் காட்டி அந்த வல்லமையுள்ள பசாசு மனிதனை அதன் ஆட்சியில் வைத்திருக்கிறது. மனிதன் அதை நம்புகிறான். அதன் வடிவங்களில் வல்லமைகளில் ஏமாந்து அதனை வணங்குகிறான்.

வல்லமையான கடவுளிலிருந்தும் அவதரித்த மெய்யான கிறிஸ்துவால் அந்த பசாசு வெற்றி கொள்ளப்பட்டது. மனிதனுக்கு மரணத்தைத் தேடித்தந்த கனியை பசாசின் சொற்படி உண்டு, பாவியான மனிதனை மரணத்தினின்றும் உயிர்ப்பித்தார். கிறிஸ்து இவ்வுலகில் பசாசு தரும் நன்மைகளையும், தீமைகளையும் அனுபவகிக்கும் மனிதன் பசாசை வெற்றி கொள்ளும் பட்சத்தில் கடவுளோடு பரதீஸில் இருப்பான் இதை வேதாகமம் சொல்கிறது. ஏனெனில் தேவன் சிலுவையில் மனிதனது பாவங்களை கிறிஸ்துவின் மேல் சுமத்தி நியாயம் தீர்த்தார். கிறிஸ்து என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று கதறும் வரை எதுவித பதிலும் காட்டவில்லை. மனித வாழ்வு புனிதமாக இருக்க வேண்டும். குடும்ப வாழ்வும், அருள் வாழ்வும் இரண்டல்ல. இன்று இல்லறத்தரது வாழ்வில் இருந்து ஆன்மீகம் பலவகைகளில் அன்நியமாகி அர்த்தம் இழந்து நிற்பதால் குடும்ப வாழ்வு சீர்குலைந்து கொண்டிருக்கிறது.

இல்லறத்தார்க்கு இவ்வுலகு ஈடுபாடு தவிர்க்க முடியாதது. குடும்பத்தைக் காப்பது கட்டாயம். எனினும் இவ் ஈடுபாடு தேவைக்கதிகமாகி பொன்னாசை, பொருளாசைக்குப் பலியாகி காணி, நிலம், பங்களாக்கள், வாகனங்கள், வேலையாட்கள், சுகபோகங்களை குறுக்குவழிகளில் தேடி பாவ வாழ்க்கையில் விழாது பார்த்துக்கொள்வது முக்கியம். எனவே, மனிதனது இலக்கு எவ்வாறு பாவங்களை விலக்கி பரலோகத்தில் தன் ஆன்மாவை சேர்க்கலாம் என்பதாயிருத்தல் வேண்டும். இத்தகையவனிடம் வாழ்வில் உண்மை, நேர்மை, அன்பு, நீதி, இரக்கம், தாழ்ச்சி, பொறுமை எனும் நற்பண்புகள் இருக்கும். தன் கல்வி, செல்வம் ஆகியவற்றால் இவ்வுலகைப் பயன்படுத்தி விண்ணுலகை சுவீகரிப்பதே குறிக்கோளாக இருக்க வேண்டும். எனவே, நீ எடுத்த முடிவே உன்னை விண்ணுலகம் சேர்க்கும் ஏனெனில், இயேசு "என்னிடத்தில் வருகிறவனை தான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6.37) எனக் கூறியுள்ளார்.

அவனைப் பாவசங்கீர்த்தனம் செய்ய ஆயத்தப்படுத்தினேன். கடந்த காலத்தில் நீ செய்த பாவங்களையெல்லாம் எதுவும் ஒழிக்காது கிறிஸ்து ஸ்தானத்தில் இருக்கும் குருவானவரிடம் அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்கும் போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும். ஏனெனில், கிறிஸ்து அந்த அதிகாரத்தை சீடர்க்கு வழங்கியுள்ளார். சீடர்களிடம் நீங்கள் யார் பாவத்தை மன்னிக்கிறீர்களோ அது பரலோகப் பிதாவாலும் மன்னிக்கப்படும். யார் பாவங்களை மன்னியாது

கட்டி வைக்கிறீர்களோ அது பரலோகப் பிதாவாலும் கட்டி வைக்கப்படும் என்று கூறியுள்ளார். எனவே, பாவமன்னிப்பு பெற்ற தேவமகன் ஆகிறாய். உன் புதிய வாழ்வு அமைதி, ஆனந்தம் நிறைந்தாயிருக்கும் என்றேன். அடுத்தநாள் பாவ சங்கீர்த்தனம். காலை எழுந்து என் செபதபம் தியானங்களை முடித்துக்கொண்டு புதிய நண்பனை அழைத்தேன். பதிலில்லை அவன் அறையில் பார்த்தேன் அங்கு அவன் இல்லை. அவன் போய்விட்டான். என் போதகமெல்லாம் வீணா?

ஒரு கிழமை சென்றது வியாதிக்காரரைப் பார்க்க வைத்தியசாலை சென்றேன். அங்கே அவன் கிடந்தான். மரணத்துடன் போராடிக்கொண்டிருந் தான். அவனைக் கேள்விக்குறியுடன் நோக்கினேன். அவன் தன் உலக வாழ்வை முடித்துக் கொண்டிருக்கும் இறுதி நேரம்.

ஐயா! பாவசங்கீர்த்தனம் செய்ய விடாது பசாசு என்னை இழுத்துக் கொண்டு போனது. ஒரு கிழமை மன அமைதியற்று அலைந்த பின் வீதியால் போய்க் கொண்டிருந்த போது கிளைமோர் வெடி விபத்தில் சிக்கிவிட்டேன். ஐயா! நான் பிழைக்கமாட்டேன். நான் பாவி பாவசங்கீர்த்தனம் செய்யக்குருவைக் கூட்டி வாருங்கள் பேசமுடியாது ஒவ்வொரு சொல்லாகப் பேசினான். குருவைக் கூட்டி வர வேண்டும் தேவனே பூரணசம்மதமற்று நிர்ப்பந்தத்தால் பாவம் செய்து அதற்கான தண்டனைகளை அனுபவித்து பச்சாபத்துடன் மனம் திருந்தி வருந்திக் கொண்டிருக்கும் இந்த ஆத்மாவைக் காப்பாற்றும் என்று வேண்டிக்கொண்டே திரும்பியபோது, என்ன அதிசயம்! குருவானவர் ஒருவர் திவ்ய நற்கருணையுடன் நின்று கொண்டிருந்தார். இது புதுமை, அவன் பாவசங்கீர்த்தனம் செய்தான். நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து கிறிஸ்துவின் உடலை உட்கொண்டு நித்திய வாழ்வினுள் பிரவேசித்துவிட்டான். இயேசுநாதர் சிலுவையில் தொங்கிய அன்று பாவமன்னிப்பு பெற்று வலது பக்கத்தில் இருந்த கள்வனுக்கு சொன்ன வார்த்தைகள் என் காதில் ரீங்காரம் செய்தது. நான் மனநிறைவடைந்தேன். ஒரு ஆன்மாவை மீட்கும் நித்திய வார்த்தைகள் என் காதில் ரீங்காரம் செய்தது. நான் மன நிறைவடைந்தேன். ஒரு ஆன்மாவை நித்திய நரகாக்கினையினின்றும் மீட்டு விட்ட பேரானந்தம் என்னை ஆட்கொண்டது. ஆயுதம் எடுத்தவன் ஆயுதத்தால் மடிந்தாலும், நிறுத்தியவன் மீட்பு பெற்ற புதுமை என்னைப் பூரணமான கிறிஸ்தவனாக்கியது.



# தினை விதைத்தவன் தினை அறுப்பான்
# வினை விதைத்தவன் வினை அறுப்பான்

## காட்சி – 1

**பாத்திரங்கள் : ஆறுமுகம், கண்மணி, சந்திரன், இந்திரன், சரஸ்வதி, பார்வதி, ரவி, மேகலா**

ஆறுமுகம் மரணப் படுக்கையில் மனைவி (கண்மணி)

ஆறுமுகம் : கண்மணி ! இந்தா வங்கிப் புத்தகம். எங்கள் பெயரிலுள்ள மூன்று லட்சமும் தான் இனி உன் சொத்து. பிள்ளைகள் உன்னை பார்ப்பாங்க என்ற நம்பிக்கையே இல்லை எனக்கு. இந்தக் காசை எடுக்காது இதற்குத்தரும் வட்டிக்காசை மட்டும் எடுத்துச் சீவி. தாலிக் கொடியை வித்து சங்கிலி, காப்பாய் போட்டுக்கொள். இரவாய்ப் பகலாய்ப் பாடுபட்டு உழைத்துப் பிள்ளைகளை ஆசிரியர்களாக்கி னோம். தாங்கள் விருப்பம் போல் ஒண்டும் இல்லாதுகளைப் பெண்டாட்டி ஆக்கித் தலையில வைச்சு ஆடறாங்க. நீ ! பிள்ளை, பிள்ளை, எண்டு சாகாமல் புத்தியாய் நட. முட்டாளாய் நடந்து பின் தற்கொலை செய்யப் போகாதே.

கண்மண் : (விம்மிக் கொண்டே) அப்பா! இப்படியெல்லாம் பேசாதீங்க தாங்க முடியல்ல. நீங்கள் போனபின் என்ன வாழ்வு வேண்டியிருக்கு?

ஆறுமுகம் : என்ன, இன்னமும் இருபது மணித்தியாலம் தான் இருப்பேன் என்று வைத்தியர் கூறியும் நம்பமாட்டியா? மணி ! பிறப்பவர் எல்லாம் இறக்கத்தானே வேண்டும். சிலர் முந்தி சிலர் பிந்தி அவ்வளவுதான்.

கண்மணி : அறியாயப்படுவாங்களால் அகதிகளாகிச் சாகிறோமே!

அடிபடாவிட்டால் இந்த மரணம் வந்திருக்காதே.

ஆறுமுகம் : பிள்ளைகள் எங்க?

கண்மணி : வந்திருவாங்க. பாவம் அதோ வாறாங்க.

## காட்சி – 2

**எல்லோரும் காம்பால் (camp) வெளியேறவாம் என்றதும் மணி, சந்திரன், இந்திரன், சரஸ்வதி, மேகலா (பிள்ளைகள் 4 பேர்)**

சந்திரன் : அம்மா ! எல்லாரும் இன்றே காம்பிலிருந்து வெளியேறப் போகினம். நான் என் மனைவியின் தங்கை வீட்டிற்குப் போறன். நாம் நான்கு பேர் தான் தங்கலாம். போயிற்று வாறேன். (மனைவி, சந்திரன் 2 பிள்ளைகள் போதல்)

இந்திரன் : அம்மா! நான் என்ர நண்பனொருவன் வீட்டில் தான் தங்க வேண்டும் என்ர இரண்டு பிள்ளைகளுடன் தங்குவதே பெரிய கஷ்டம். நீ என்ன செய்யப்போகிறாய்? மூத்தவர் தனக்கொரு பொறுப்பும் இல்லாத மாதிரிப் பறந்திட்டார். நான் என்ன செய்ய?

மணி : நான் என்னடா செய்யட்டும்? இடம் வலம் தெரியாதனான். இப்போதைக்கு வாரேனே உன்னோட பிறகு ஒரு இடம் பார்க்கிறேன். அப்பா நம்மைவிட்டு போனதும் நடுத்தெருவில் நிற்கிறேனே ஆதரவற்று.

இந்திரன்: சரி, வா எல்லாம் நமக்குத்தானே சுமை.

மணி : (மனதில் – மனுஷனோட நானும் போயிருக்கோணும். கடவுள் இரங்கல்ல) நான் சீக்கிரமா வேற இடம் பார்த்திடுவேன். இந்திரா ! இப்போதைக்கு உன்னுடன் வாறன்.

## காட்சி – 3

**பாத்திரங்கள் : கண்மணி, இந்திரன் 2 கிழமையால்**

இந்திரன் : அம்மா என்ர மனுஷியும் பாவம் தானே. எல்லோருக்கும் சமைச்சுப் போடறதெண்டா. நீயும் வேற இடம் பார்க்கிறதெண்டு வந்து 2 கிழமை யாச்சு. உன்னாலேயும் பெரிதாய் ஒண்டும் ஏலாது.....

மணி : சரி, சரி நீ கவலைப்படாத எனது சினேகிதி ஒருத்தி அடுத்ததெருவில் இருக்கிறாள் பார்வதி எண்டு. அவ தனியாத்தான் இருக்கிறா ஒரு

கொட்டிலில் நான் அவவோட போயிருக்கிறேன். நேற்றுக்கண்டு பேசினேன். வரும் படி கூறினாள்.

இந்திரன்: அப்படியா! சரியம்மா நீ போயிரு உனக்கேதும் தேவையெண்டா நான் கவனிப்பேன். நாளைக்கு சனிக்கிழமை நாளை போகலாம்? என்ன? நான் இருக்கும் வரை கவனிப்பென் தானே.

மணி : ஓ! நாளை போகலாம்.

## காட்சி – 4

பாத்திரங்கள் : சந்திரன் . சரஸ்வதி

சரஸ்வதி : இந்தா பாருங்க உங்கம்மா ஏன் அந்தப் பார்வதியோட கொட்டலில இருக்கிறா?

சந்திரன் : என்ன செய்யிறது கூட்டியரட்டா?

சரஸ்வதி : என்னாங்க உங்களுக்கு அறிவிருக்கா? நாங்களே இருப்பது கஷ்ட மாயிருக்க அதுக்குள்ள அம்மாவைக் கொண்டாறதெண்டா.

சந்திரன் : அப்படியெண்டா பின் ஏன் உனக்கு அவ கதை?

சரஸ்வதி : இல்ல. அது கொட்டில் 4 பவுண் தாலிக்கொடியையும் வைத்துக் கொண்டு யாராவது களவெடுத்தாலும். ஏனுங்க மூத்த மகனுக்குத் தானே தாலிக்கொடி அதை வாங்கினா என்ன? தாறதை இப்ப தந்தா என்ன? அவவுக்கேன் தாலிக்கொடி? அறுபது வயதாச்சுத் தானே.

சந்திரன் : முறைப்படி எனக்குத்தான். ஆனா அவ இப்போ கேட்டுத்தருவாவோ தெரியாது.

சரஸ்வதி : அப்படியெண்டா. ஒண்டு செய்யுங்க. அவவைக் கொஞ்ச நாள் இங்க கொண்டு வந்து வைப்பம். பிறகு கேட்போம் என்ன?

சந்திரன் : ம்...ம்... அப்படித்தான் செய்யோணும். வயதாச்சு அவவுக்கேன் பணமும் நகையும்?

## காட்சி – 5

பாத்திரங்கள் : சந்திரன். சரஸ்வதி. கண்மணி. பிள்ளைகள்

சந்திரன் : (தாயிடம் போய்) அம்மா எப்படியிருக்கிறாய்? ஐயோ! இதென்ன கோலம் கறுத்து இளைச்சு நீ வா வந்து கொஞ்ச நாளாவது

என்னோட இருந்திற்று வரலாம்.

மணி : பார்வதி தனிச்சுப் போவாளே.

சந்திரன் : ஏன் முந்தித் தனியாய்த்தானே இருந்தவ, அவ ஒண்டும் சொல்லமாட்டா என்ன மாமி சொல்றீங்க?

பார்வதி : ஆமாம். மணி ! கொஞ்சநாள் போய்ப் பிள்ளையோட இருந்திட்டு வாயேன். மெலிந்து தான் போனாய். எப்படியெண்டாலும் பிள்ளைப் பாசம் விடுமா!

மணி : சரி நட ! (மணி கிளம்பல்) போய்வாரேன், கவனமாய் இருங்கோ.

## காட்சி – 6

பாத்திரங்கள் : கண்மணி, சந்திரன், சரஸ்வதி, பிள்ளைகள் (ரவ)

சரஸ்வதி : என்னங்க மாமி வந்தும் ஆறு நாளாச்சு ஒரு ஆயிரம் ரூபாவைத் தந்துவிட்டு ஏதோ தன் கணக்குச் சரி எண்டமாதிரி இருக்குது. இந்த ஆறு நாளும் எவ்வளவு செலவு.

சந்திரன் : நீ தாறுமாறாய்ச் செலவழித்து விட்டு அவ மேல் ஏன் பழி போடுகிறாய்? விரலுக்குத்தக்க வீக்கம் என்றவாறில்லாது ஏன் செலவழிக்கறாய்.... அவ மாதம் மூவாயிரம் வட்டி எடுக்கிறவ. பத்து நாட்களுக்கு ஆயிரம் தான் செலவு செய்வா. அதிகம் எப்படிச் செலவு செய்ய முடியும்?

சரஸ்வதி: சரி போகட்டும். அந்தத் தாலிக்கொடியையாவது வாங்கித் தாருங்களேன். அடைவு வைச்சுக் காசு எடுக்கலாம் தானே. செலவுக்குகாசில்லை.

சந்திரன் : அம்மா! அம்மா!

மணி : என்னடா என்ன?

சந்திரன் : உன்ர தாலிக்கொடி எங்க?

மணி : இருக்கு ஏன்?

சந்திரன் : அதைத் தாவேன் பிறகு தாறதை இப்போ தந்தால் உதவும் எல்லா பணக்கஷ்டமாயிருக்கு.

மணி : பிறகு உனக்குத் தாறதெண்டு யார் சொன்னது? என்ன புதுக்கதை?

சரஸ்வதி: ஏன் மூத்த மகனுக்குத் தானே தாலி?

மணி : யார் வைச்ச சட்டம்? படிப்பிச்சு விட்டதற்கு எத்தனை லட்சத்தை உழைத்து அல்லது சீதனமாக வாங்கித்தந்ததோட இளைய

பிள்ளைகளையும் ஆளாக்கி விட்ட பெரிய மூத்தமகன் ! என்ன கதைக்கிறாய் நீ?

சரஸ்வதி : பாத்தீங்களா? இப்படி வரும் என்று எனக்கு முதலிலே தெரியும். போய் இருக்கிற இடத்தில இருக்கச் சொல்லுங்கோ. இது ஒண்ணும் சத்திரமில்லை. நான் அவித்துப்போடும் மாட்டுப் பெண்ணுமல்ல. (பெரிய பையன் ரவி எழுதுகிறான்)

ரவி : (எழுதிய படி) பொறும்மா, அதென்ன மாட்டுப்பெண்ணா? ஆறுதலாய்ச் சொல்லேன்.

சரஸ்வதி : ஏன்டா, என்னடா எழுதுகிறாய்? ஏன்டா?

ரவி : நீ சொல்றதைத்தானம்மா, சொல்லு சரியாய் எழுத!

சரஸ்வதி : ஏனடா?

ரவி : அம்மா ! நான் உன்ர மூத்த மகன். நான் கலியாணம் செய்த பிறகு என்ர பெண்சாதி உன்னைப் பேசவேண்டி வரும்போது இதை வைத்திருந்தால் பார்த்துப் பேசலாமல்லவா? எப்படி என் புத்தி?

சரஸ்வதி: என்னைப் பேசுவாளா? வாயைக் கிழிச்சுப்போடமாட்டனா? உன்னை மிதிச்சுப்போடமாட்டனா?

ரவி : அதெப்படி அம்மா? உனக்கொரு நியாயம், மற்றவர்க்கு ஒன்று அதெல்லாம் பிழையம்ம. நீதி, நியாயம் சரியாய் இருக்கோணும். எனக்கு மனுஷி ஒண்டு வந்தா நீ எங்காவது போக வேண்டியது தானே?

மணி : கேளுடா கண்ணா! வடிவாக்கேள் உனக்கு இருக்கிற அறிவு இவளுக்கெங்கே? உன் அப்பனுக்குத்தான் எங்கே? எல்லாம் கலியுகம்.

ரவி : பாட்டி ! நீ கவலைப்படாத பாட்டி. நான் உழைச்சுப் போடுவன். வாறவளிடம் உனக்குச் சீதனமும் வாங்கித் தருவன். உன்னை வடிவாப் பாாப்பேன் பாட்டி.

சரஸ்வதி: கிழிப்பாய். குரங்கு ஏழாம் கிலாஸ் சரியாத் தாண்ட வக்கில்ல. வாயப் பாரு. படிப்பும் இருந்தாக்கையில பிடிக்க ஏலாது. குணம் அறிஞ்சு தான் குதிரைக்குக் கொம்பு கொடுக்கல்ல.

ரவி : அம்மா ! தாய்ப்போல பிள்ளை நூலைப் போல சீலை என்று நேற்று ரீச்சர் சொன்னவ. நீ ஆறாம் கிளாஸ் மட்டும் தான் படிச்சியாம். உன்னைப் போலத்தானே நானிருப்பேன்.

மணி : நான் போறேன்டா. போயிற்று வாரேன். பேசி வீணாய் அடிவாங்காமலிருடா கண்ணா! போயிட்டு வாரேண்டா குஞ்சு!

## காட்சி - 7

**பாத்திரங்கள் : பார்வதி, கண்மணி, கந்தசாமி, மனைவி - பூபதி, இந்திரன்**

மணி : அக்கா !

பார்வதி : வா ! மணி வா! என்ன ஒரேயடியாப் போயிற்றாய்? என்ன மறந்திட்டியா? எப்போ வருவாயெண்டு பார்த்தபடி இருந்தேன்.

மணி : உன்னை மறக்க முடியுமாக்கா, அதுதான் வந்திட்டேன்.

பார்வதி : உன்ர இளைய மகன் வந்தானா? நேற்று வந்தான். பெரிய காசுப் பிரச்சனைபோலிருக்கு. அவனுக்கு கிட்னிறபிளாம். ஒப்பரேசன் செய்யவேண்டுமாம். இரண்டு லட்சம் தேவைப்படுதாம்.

மணி : ஐயோ தெய்வமே! அவனுக்கு கிட்னிறபிளா? எப்படியிருக்கிறான்? நான் போறேனக்கா. (மகன் வரல்)

இந்திரன் : அம்மா!

மணி : வாப்பா ! வா! என்ன உனக்கு வருத்தமா? அக்கா சொன்னா. இப்ப வர இருந்தேன். வந்திட்டாய். என்னய்யா உனக்கு?

இந்திரன் : ஆமாம்மா எனக்கு இப்ப இரண்டு இலட்சம் தேவை ஒப்பரேசனுக்கு

மணி : அதுக்கென்ன? கடவுளே! என்ர பிள்ளையைக் காப்பாற்று. வாடா வா! பாங்கில போய் எடுத்துத்தாரன் வா!

## காட்சி - 8

**பாத்திரங்கள் : மணி, பார்வதி, இந்திரன், மேகலா**

மணி : நான் கும்பிடுற தெய்வம் காப்பாற்றிப்போட்டுது. கவனமா இருக்கோணும் சாப்பாட்டு விசயத்தில.

மேகலா : கவனமாயிருக்க பணம் வேணுமே. நான் என்ன வங்கியல வச்சுக் கொண்டிருக்கிறேன். நான் என்ன செய்ய?

மணி : நானும் வங்கியில இருந்ததையெல்லாத்தையும் எடுத்திட்டேன். ஒரு இருபதாயிரம் தான் கிடக்கு. அதுதான் எனக்கெண்டு கிடக்கு.

மேகலா : இந்தக் காலம் வயதானதுகளுக்குத்தான் பாங்கில காசு தேவையாக்கும். வாழும் பிள்ளை வளரும் பிள்ளைகளுக்கில்லாதது வயதானதுகளுக்கு! என்ன கலியுகமோ?

மணி : இந்தா பார். நன்றி கெட்டத்தனமாய் பேசாதே. என்னத்தைச் செய்தாலும் நன்றியேயில்ல. கிடந்ததெல்லாம் செலவழிச்சும்.

மனச்சாட்சி இல்லாது வாழாத.

இந்திரன்: என்னம்மா. பெரியகூட கோபுரமா தந்திட்டாய்? ஏதோ சிறு உதவியைச் செய்திட்டுதுள்ளாத நீ தந்தது உனக்குச் சாப்பாடு போடவே சரி. செய்தத சொல்லிக் காட்டாதம்மா.

மணி : இந்த இரண்டு கிழமைக்கு சாப்பாட்டுக்கு அவ்வளவெண்டா எனக்கு மீதி நாட்களுக்கு எவ்வளவாகும். நான் போறன். நீங்க செய்ததுக்கெல்லாம் நன்றி.

மேகலா : பார்த்தீங்களா! இந்த மனுஷிக்குச் சமைச்சுப்போட்டும் ஒரு நன்றியேயில்ல. தன் காசு தான் பெரிசு. மற்றவர் மாடாய் உழைத்தாலும் நன்றியேயில்ல.

இந்திரன்: வயதானா இப்படித்தான். விடு கதையை.

## காட்சி – 9

பாத்திரங்கள் : மணி, இந்திரன், பார்வதி, சந்திரன், கந்தசாமி, மேகலா

பார்வதி : (போனில்) தம்பி சந்திரா! அம்மா வழுக்கி விழுந்து எழும்பமாட்டாம இருந்து அயல் வீட்டார் தூக்கி வளர்த்தி இருக்கினம். எலும்பு முறிந்து விட்டது போல. உடனே வா! கிடந்து துடிக்கிறா. சீக்கிரம் வா.

சந்திரன் : பார்வதியக்கா! எனக்குப் பொறுத்த வேலையாயிருக்கு. பாடசாலை முடிந்தபின் தான் வருவேன். இப்ப வரமுடியாது. இந்திரனைக் கூப்பிடுங்க.

பார்வதி : (போனில்) இந்திரா ! அம்மா விழுந்திட்டா. ஆபத்தாயிருக்கு. உடனே வா. வலி தாங்காது துடிக்கிறா. எலும்பு முறிந்து விட்டது போல. உடனே வா!

இந்திரன் : பாடசாலையை விட்டு எப்படி வாறது? இரண்டு மணிக்குத்தான் வரலாம். முக்கிய வேலையாயிருக்கிறேன். அண்ணனைக் கூப்பிடுங்க.

பார்வதி : ராட்சதப் பயல்கள். தாய் துடிக்கிறாள். ஏனென்டு கேட்கிறான்களில்ல. கலியுகம், கலியுகம் இவங்களையெல்லாம் பெத்து வளர்த்து, கையில கிடந்த சிறு தொகையையும் தனக்கென வைக்காது கொடுத்து வாழ்ந்ததற்குக் காட்டும் நன்றி. நாய் என்று சொல்வதும் பாவம்.

மணி : அக்கா ! அவங்களைப் பேசாதீங்க அக்கா! பாவங்கள். அக்கா நான் பிழைக்கமாட்டேனக்கா இந்தாங்க (கொடுத்தல்) இப்படி திடீரென ஏதாவது நடக்கும் என்றுதான் நான் என் தாலிய மூன்று சங்கிலியாக்கினேன். இரண்டையும் அவங்களுக்கு ஒவ்வொன்றாய் கொடுங்க. மற்ற இரண்டு பவுண் சங்கிலி இந்தாங்க. விற்று எனக்கு அடக்கம் செய்ய எடுங்கள். மிச்சம் வந்தால் நீங்கள் எடுங்கள். அது உங்களுக்கு பிள்ளைகளைப் பார்க்காது போகிறேன் என்ற கவலைதானக்கா.

பார்வதி : சும்மா, இரு மணி ! ஒன்றும் ஆகாது. பொறு ஆஸ்பத்திரிக்குப் போக எல்லாம் சுகமாயிடும். பிள்ளைகள், பிள்ளைகள் என்று ஏங்கினது காணும் போ. வயதாகும் காலத்தில் மரியாதை அன்புடன் பார்த்தெடுப்பாங்க என்றுதான் பிள்ளை பெற்று வளர்ப்பது. இது என்னடாண்டா, எல்லாம் தலைகீழா நடக்குது. அதோ, ஓட்டோ வந்தாச்சு!

மணி : வேணாமக்கா, சுகப்பட்டுத்தான் ஏன் இந்த வாழ்வு. ஒரு பிள்ளைகுட்டியுடன் சந்தோஷமாய் வாழ முடியா கலியுக வாழ்வு. வேண்டாமக்கா வேண்டாம். அக்கா!
(பார்வதி கையைப் பற்றிய படி இருக்கிறாள்)

(அயல் வீட்டு கந்தசாமி, மனைவியுடன் வருகிறார்)

கந்தசாமி : ஐயோ, என்னக்கா மிக மோசமாயிருக்கே!

பார்வதி : (அழுதபடி) என்னாங்க, நான் என்ன செய்ய அவங்களைக் கூப்பிடறேன். (போனில்) சந்திரா! சந்திரனில்லையா? நீங்க ஆரு? அமிர்தரத்தினமா? என்ன கிளைமோரில் சிக்கி சந்திரன் மகனும், இந்திரன் மகனும் படுகாயமாய் ஆஸ்பத்திரியிலயா? ஐயோ கடவுளே! இது என்ன சோதனை? பட்ட காலிலே படும் எண்டு அவங்க தாயின் உடலைக்கூடக் காணமாட்டங்க போலிருக்கே!


(மணி இறத்தல் எல்லோரும் அழுகிறார்கள்.)

பார்வதி போனில் ரத்தினத்துடன்

பார்வதி : ரத்தினம் ! மணி இறந்திட்டா. என்ன அவங்க பிள்ளைகளைக் கொண்டு கொழும்புக்குப் போகிறான்களா? அப்படியானா அடக்கம் செய்யவும் வரமாட்டாங்களா? என்ன தாலிக்கொடி வாங்கிவரோணும் என்டாங்களா? நீ வா! அதைத் தந்து விடறேன். வா எல்லாம் நேரில் பேசலாம்.

உடனே வா. (போனை வைத்து) தெய்வ நீதிக்குத் தப்ப முடியுமா? வினை விதைத்தவன் வினை அறுக்கத்தானே வேணும். நல்ல காலம் நான் பிள்ளையேயில்லாது மலடியாயிருந்தது. பின் என்ன பாருங்க ஒண்டுக்கு இரண்டு என்று வளர்த்துப் படிப்பித்து கஷ்டப்பட்டு ஆளாக்கிக் கண்டது என்ன? உயிர்போகப் போகிறது என்றபோது கூட எட்டிப் பார்த்தாங்களா? கிளவியிட்ட என்ன பிடுங்கலாம் என்று இருந்தாங்களேயல்லாது வளர்த்தகடன் தீர்த்தாங்களா? சரீர உதவியாவது செய்தாங்களா? அதுதான் தெய்வக் கோபத்துக் காளாகிவிட்டாங்க. நாம் என்ன பண்றது. பாவம் மணி அநாதை போலப் போகப் போகிறாள். நான் தான் கொள்ளி போடப்போறன். மணி, உன்னை நினைச்சா எனக்கு இதயமே வெடிக்குதடி! இப்படிப் பிள்ளைகளும் கலியுகத்தில் இருக்கத்தான் இருக்கு கடவுளே! என்ன உலகம்? இன்றைக்கு நாம் அளக்கிற படியே, நாளைக்கு நமக்கும் என்பது புரியாமல் என்ன படிப்புப் படிக்கிறான்களோ! இறைவா! இறுதியில் நீ தான் அழவேண்டியிருக்கு!

முற்றும்.



## வேதாகமத்திலிருந்தும் சில துளிகள்

## யுத்தமும் அழிவும் ஏன்?

"நான் அந்த நாட்டிற்கு எதிராக யுத்தத்தையும் கொள்ளை நோயையும் அனுப்புவேன். அப்பொழுது அந்த நாடு அழியும்" (எசேக்கியேல் 14:13:20)

"யுத்தத்தில் பிரியப்படுகிற ஜனங்களை சிதறடிப்பார்" (சங்கீதம் 68:30)

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான இரத்தப்பலியொன்று செலுத்தப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட பலி ஓர் மனித உயிர். இறைவனுடைய உயிர். எல்லா மனிதரும் தன்னிடம் வரவேண்டும் என்றே அப்படிப் பலியானார். காரணம் இறைவனுடைய நியதி -
"இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது" (எபிரேயர் 9:22) என்பதே இறைவன் மனிதனானது.

"மரணத்தின் அதிகாரத்தை வைத்துக்கொண்டிருந்த பிசாசானவனை அழிக்கும் படிக்கும் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் சாவைக் குறித்த பயத்திற்கு அடிமையாக இருந்தவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும் படிக்கும் அப்படியானவர்" (எபிரேயர் 2: 14:-15)

துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு இறைவனிடத்தில் திரும்பக்கடவன்" (ஏசாயா 55:7)

"அவரிடம் செல்லுங்கள், உங்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்"

இந்த உலகத்தில் நிம்மதியும் மரணத்தின் பின் பேரின்பமும் அடையத் தடையாயிருப்பது நம்முடைய பாவம்தான்.

ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ், அரியாலை. T.P: 0779176848